6

# இறைக் கொள்கையும் அரச நிதியும்

## 6.1 பொதுநோக்கு


நடுத்தர காலத்தில் வலுவானதும் பிராந்திய ரீதியில் சமநிலையான வளர்ச்சியையும் எய்துவதற்கான பரந்த அடிப்படையிலான அபிவிருத்திக் குறிக்கோள்களுக்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் இறைப் பற்றாக்குறையினை மேலும் திரட்சிப்படுத்துவதில் அரசாங்கத்தின் இறைக் கொள்கை உபாயம் கவனத்தினைச் செலுத்தியது. இதற்கமைய, கடந்த அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இறைச் சீர்திருத்தங்கள் இவ்வாண்டுப் பகுதியில் மேலும் வலுப்படுத்தப்பட்டன. அரசிறைப் பக்கத்தில், வரி முறைகளை விரிவாக்குதல், வரி விலக்கல்களையும் சலுகைகளையும் ஒழுங்குமுறைப்படுத்தல், பொய்யான சிருஷ்டிப்புக்களுக்கான வாய்ப்புக்களைக் குறைத்தல், வரி முறைமைகளின் வினைத்திறனையும் இலகுபடுத்தல்களையும் மேம்படுத்துதல் என்பனவற்றின் பொருட்டு வரிச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசின் அரசிறையினை மேம்படுத்துவதற்கு உதவும். செலவினப் பக்கத்தில், மீண்டெழும் செலவினத்தினைச் சிக்கனப்படுத்துவதில் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் நாட்டின் ஒட்டுமொத்த முதலீட்டு மட்டங்களினதும் மேம்பாட்டிற்கு உதவியளிக்கின்ற விதத்தில் விரும்பத்தக்க மட்டத்தில் அரச முதலீடுகள் பேணப்பட்டு வருகின்றன. படுகடன் முகாமைத்துவ உபாயமானது, சாத்தியமானளவிற்கு குறைந்த மட்டத்தில் அரசின் நிதியிடல் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதன் மீது கவனத்தினைச் செலுத்திய வேளையில் இடர்நேர்வுகள் குறைந்த மட்டத்தில் பேணப்பட்டன.

வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மேலும் குறைக்கின்ற வேளையில், உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்தினை நோக்கமாகக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகளுக்கு தூண்டுதலளிக்கக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கும் பொருட்டு 2013 -2016 காலப்பகுதிக்கான நடுத்தர கால பேரண்ட இறைக் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் இறைக் கொள்கை உபாயம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2012ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 6.5 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 5.8 சதவீதத்திற்குக் குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. இதன்படி, அரசின் அரசிறை 2012இன் 13.9 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 14.5 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கும், மீண்டெழும் செலவினத்திலான குறைப்பு 2012இன் 14.9 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 14.6 சதவீதத்திற்கு குறைவடைவதற்கும் இவற்றின் காரணமாக அரச முதலீடுகள் மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 6.1 சதவீதத்தில் பேணப்படுமென 2013ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட இலக்குகள் எதிர்பார்த்தன. எனினும், 2013இன் முதலரைப் பகுதியில் அரச அரசிறையின் செயலாற்றம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவாக இருந்தமைக்கு உந்து ஊர்திகள் மற்றும் எரிபொருட்களின் இறக்குமதிகளின் குறைப்பிலிருந்து தோன்றிய இறக்குமதியுடன் தொடர்பான வரிச் சேகரிப்புக்கள் வீழ்ச்சியடைந்தமை, உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு

உதவியளிப்பதற்காக வழங்கப்பட்ட வரி விலக்கல்கள் மற்றும் சலுகைகள், அரச நிறுவனங்களிலிருந்தான இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் குறைந்தளவு மாற்றல்கள் என்பன பெருமளவு காரணங்களாக இருந்ததுடன் தற்பொழுது இடம்பெற்றுவரும் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களைத் தொடர்வது இவ்வாண்டுப் பகுதியில் இறை இலக்குகளை பூர்த்தி செய்வதில் பாரிய சவால்களாகக் காணப்பட்டன. அரசாங்கம் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கு தடங்கல்கள் எதனையும் ஏற்படுத்தாமல் செலவின நிகழ்ச்சித்திட்டத்தினை சிக்கனப்படுத்துவனூடாக இச்சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடியதாக இருந்தது.

**2013இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது மொ.உ.உற்பத்தியின் 5.9 சதவீதமாகப் பேணப்பட்டமையானது, இவ்வாண்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட வரவு செலவுத்திட்ட இலக்கான மொ.உ.உற்பத்தியின் 5.8 சதவீதத்திலிருந்து சிறிதளவு விலகியமையைப் பிரதிபலித்தது. இருப்பினும் இது 2012இல் பதிவு செய்யப்பட்ட 6.5 சதவீதம் கொண்ட பற்றாக்குறையிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டிருந்தது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசிறை, முன்னைய ஆண்டின் 13.9 சதவீதத்திலிருந்து 2013இல் 13.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இறக்குமதியுடன் தொடர்பான வரிகளிலிருந்தான அரசிறை வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். எனினும், அரசாங்கத்தின் மொத்தச் செலவினத்திலும் தேறிய கடன் வழங்கலிலும் ஏற்பட்ட குறைப்பு 2012இன் மொ.உ.உற்பத்தியின் 20.5 சதவீதத்திலிருந்து 2013இல் 19.2 சதவீதத்திற்குக் குறைவடைந்தமையானது, மிகையான செயலாற்றமாகக் காணப்பட்டதுடன் இறைத்திரட்சிச் செயற்பாட்டினை நோக்கிய அரசின் உறுதியான கடப்பாட்டினையும் பிரதிபலித்தது. மீண்டெழும் செலவினங்களின் மீதான இறுக்கமான கட்டுப்பாடு, மீண்டெழும் செலவினங்களை

வரைபடம் 6.1 முக்கிய இறைக் குறிக்காட்டிகள் (மொ.உ.உ.இன் சதவீதமாக)




2012இன் மொ.உ.உற்பத்தியின் 14.9 சதவீதத்திலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியின் 13.9 சதவீதத்திற்கு குறைப்பதற்கு அரசாங்கத்தினை இயலச் செய்தது. அரசாங்கம் அதன் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினையும் அரச முதலீடுகளையும் முன்னுரிமைப்படுத்த வேண்டியிருந்தமையினால் மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2012இன் 5.9 சதவீதத்திலிருந்து 5.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அரசாங்கத்தின் குறைச் சேமிப்புக்களைப் பிரதிபலிக்கும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் 0.1 சதவீதத்திற்கு குறைவடையும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அது, முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 1.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதத்திற்கு மேம்பட்டது. அதேவேளை, திரண்ட பற்றாக்குறையிலிருந்தான வட்டிக் கொடுப்பனவுகளின் நீக்கத்துடன் அரசாங்கத்தின் இறைக் கொள்கையின் தற்றுணிபினைப் பிரதிபலிக்கின்ற ஆரம்பப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 1.1 சதவீதத்திலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன், இது இலக்கிடப்பட்ட மட்டமான மொ.உ.உற்பத்தியின் 0.7 சதவீதத்திலும் பார்க்க சிறிதளவு உயர்வானதாகும். வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு உள்நாட்டு மூலங்களில் மிகக் கூடியளவிற்கு தங்கியிருந்ததுடன் மொத்த நிதியிடல் தேவைப்பாடுகளில் வங்கித்தொழில் துறை 58 சதவீதத்திற்குப் பங்களித்தது. மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதமும் 2012இன் 79.2 சதவீதத்திலிருந்து 2013ல் 78.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து கடந்த அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைத் தொடர்ந்தது.

## 6.2 இறைக் கொள்கைப் போக்கும் வழிமுறைகளும்

**2013ஆம் ஆண்டிற்கான அரசின் இறைக் கொள்கையின் திரண்ட திசை, வரவு செலத்திட்டப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியின் 5.8 சதவீதத்திற்குக் குறைப்பதுடன், உயர்ந்த அரசிறைத் திரட்டல் மற்றும் அரச செலவினங்களை சரியான முறையில் முகாமைத்துவம் செய்வதனூடாக மேலும் திரட்சிப்படுத்துவதனை நோக்கி நெறிப்படுத்தப்பட்டது.** இதற்கமைய, வரி அமைப்பினை இலகுபடுத்தி வரித் தளத்தினை விரிவாக்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட அண்மைய வரிச் சீர்திருத்தங்களின் சாதகமான தாக்கங்களுடன் அரசின் அரசிறை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்ட வேளையில், செலவினமானது மீண்டெழும்

**அட்டவணை 6.1 அரசிறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு**

| விடயம் | 2012 | 2013 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2013 தற்காலிக மானவை | 2014 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| | ரூ.மில்லியன் | | | |
| **மொத்த அரசிறை மற்றும் கொடைகள்** | **1,067,532** | **1,277,544** | **1,153,306** | **1,469,493** |
| மொத்த அரசிறை | 1,051,460 | 1,257,544 | 1,137,447 | 1,437,493 |
| வரி அரசிறை (அ) | 908,913 | 1,131,041 | 1,005,895 | 1,274,600 |
| வரியல்லா அரசிறை | 142,547 | 126,503 | 131,552 | 162,893 |
| கொடைகள் | 16,071 | 20,000 | 15,859 | 32,000 |
| **மீள்கொடுப்பனவைக் கழித்த செலவினமும் கடன் வழங்கலும்** | **1,556,499** | **1,784,944** | **1,669,396** | **1,985,619** |
| நடைமுறை | 1,131,023 | 1,267,390 | 1,205,180 | 1,328,283 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கல்களும் | 425,476 | 517,554 | 464,216 | 657,336 |
| இதில் அரச முதலீடு | 443,973 | 529,250 | 481,203 | 668,465 |
| **நடைமுறைக்கணக்கு மிகை(+)/பற்றாக்குறை (-)** | **-79,563** | **-9,846** | **-67,733** | **109,210** |
| **முதன்மைக்கணக்கு மிகை(+)/பற்றாக்குறை(-)** | **-80,469** | **-62,600** | **-72,083** | **-75,091** |
| **திரண்ட வரவு செலவு திட்ட மிகை (+)/பற்றாக்குறை (-)** | **-488,967** | **-507,400** | **-516,090** | **-516,126** |
| **மொத்த நிதியிடல்** | **488,967** | **507,400** | **516,090** | **516,126** |
| வெளிநாட்டு நிதியிடல் (ஆ) | 286,455 | 148,000 | 123,700 | 286,850 |
| உள்நாட்டு நிதியிடல் | 202,512 | 359,400 | 392,390 | 229,276 |
| சந்தைக் கடன்பாடுகள் | 202,512 | 359,400 | 379,390 | 229,276 |
| வங்கியல்லா | 70,985 | 289,400 | 82,414 | 129,276 |
| வங்கி | 131,527 | 70,000 | 296,977 | 100,000 |
| நாணய மேலாண்மை | 16,101 | வி.கி | -164,836 | வி.கி |
| வர்த்தக வங்கிகள் | 115,427 | வி.கி | 461,813 | வி.கி |
| சந்தையல்லாக் கடன்பாடுகள் | - | - | 13,000 | - |
| | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | | |
| **மொத்த அரசிறை மற்றும் கொடைகள்** | **14.1** | **14.7** | **13.3** | **14.8** |
| மொத்த அரசிறை | 13.9 | 14.5 | 13.1 | 14.5 |
| வரி அரசிறை (அ) | 12.0 | 13.0 | 11.6 | 12.8 |
| வரியல்லா அரசிறை | 1.9 | 1.5 | 1.5 | 1.6 |
| கொடைகள் | 0.2 | 0.2 | 0.2 | 0.3 |
| **மீள்கொடுப்பனவைக் கழித்த செலவினமும் கடன் வழங்கலும்** | **20.5** | **20.5** | **19.2** | **20.0** |
| நடைமுறை | 14.9 | 14.6 | 13.9 | 13.4 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கல்களும் | 5.6 | 6.0 | 5.4 | 6.6 |
| இதில் அரச முதலீடு | 5.9 | 6.1 | 5.5 | 6.7 |
| **நடைமுறைக்கணக்கு மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **-1.0** | **-0.1** | **-0.8** | **1.1** |
| **முதன்மைக்கணக்கு மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **-1.1** | **-0.7** | **-0.8** | **-0.8** |
| **திரண்ட வரவு செலவு திட்ட மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **-6.5** | **-5.8** | **-5.9** | **-5.2** |
| **மொத்த நிதியிடல்** | **6.5** | **5.8** | **5.9** | **5.2** |
| வெளிநாட்டு நிதியிடல் (ஆ) | 3.8 | 1.7 | 1.4 | 2.9 |
| உள்நாட்டு நிதியிடல் | 2.7 | 4.1 | 4.5 | 2.3 |
| சந்தைக் கடன்பாடுகள் | 2.7 | 4.1 | 4.4 | 2.3 |
| வங்கியல்லா | 0.9 | 3.3 | 1.0 | 1.3 |
| வங்கி | 1.7 | 0.8 | 3.4 | 1.0 |
| நாணய மேலாண்மை | 0.2 | வி.கி | -1.9 | வி.கி |
| வர்த்தக வங்கிகள் | 1.5 | வி.கி | 5.3 | வி.கி |
| சந்தையல்லாக் கடன்பாடுகள் | - | - | 0.1 | - |

(அ) குறிப்பிட்ட செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட பெறுமதி சேர் வரிவிலக்கு அளவு மற்றும் பொது ஊழியர்களால் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகைகளின் அளவு உள்ளடங்களாக.
(ஆ) வெளிநாட்டு முதலீட்டாளர், வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் உள்ளடக்குகின்றது.

மூலம் : நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

செலவினம் சிக்கனப்படுத்தப்பட்டமையினூடாகவும் அரச முதலீடுகள் விரும்பத்தக்க மட்டத்தில் பேணப்பட்டதனூடாகவும் மிதமடையுமென எதிர்பார்க்கப்பட்டது. இதற்கமைய, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையும் ஆரம்ப கணக்குப் பற்றாக்குறையும் 2012இன் மொ.உ.உற்பத்தியின் 1.0 சதவீதம் மற்றும் 1.1 சதவீதங்களிலிருந்து 2013இல் முறையே 0.1 சதவீதத்திற்கும் 0.7 சதவீதத்திற்கும் குறைவடையுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், அரச முதலீடுகள் 2012இன் மொ.உ.உற்பத்தியின் 5.9 சதவீதத்திலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியின் 6.1 சதவீதத்தில் பேணப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

**ஏற்றுமதியாளர்களை ஊக்குவித்தல், குறிப்பிட்ட சில கைத்தொழில்களின் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தல் மற்றும் வெளிநாட்டு முதலீட்டு பாய்ச்சலை அதிகரித்தல் என்பனவற்றின் பொருட்டு 2013இல் பல்வேறுபட்ட வருமான வரிச் சலுகைகள் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் நாட்டில் முதலீட்டாளர்களுக்கு சிநேகபூர்வ சூழலொன்றும் உருவாக்கப்பட்டு வருகின்றது.** இவ்வாண்டுப் பகுதியில், வெளிநாட்டு நாணயங்களில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி வருமானம் மற்றும் கட்டணங்களுக்கு பல வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன. இலங்கையில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்ட இலாபம் மற்றும் வருமானம், தயாரிப்பு ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக 12 சதவீத வரியினைச் செலுத்தப் பொறுப்புடையதாக இருந்த வேளையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மும்மடங்கு குறைப்பு வழங்கப்பட்டது. மேலும், கூறுநம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளின் தொழிலை ஊக்குவிப்பதற்காக அக்கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான வருமான வரி வீதம் 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. மேலும், ஏதேனும் பொறிகள், பொறித் தொகுதிகள் அல்லது சாதனங்களை கொள்வனவு செய்வதற்கான செலவு தொழில்நுட்பத் தரங்களை ஊக்குவிப்பதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்களின் இலாபத்தினைக் கணிக்கும் பொழுது கழித்துவிடப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

**பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி என்பனவற்றின் கீழ் வரித்தளத்தினை விரிவடையச் செய்வதற்காக பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் விலக்கல்கள் மற்றும் சலுகைகளினூடாக தெரிந்தெடுக்கப்பட்ட உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கப்பட்டது.** இதன்படி, அரசிறைச் சேகரிப்புக்களை உயர்த்தும் நோக்குடன் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரங்களுக்கு பெறுமதிசேர் வரி நீடிக்கப்பட்டது. மேலும், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உற்பத்திகளுக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட வேளையில் சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளை ஊக்குவிக்கும் விதத்தில் ஆண்டு மொத்தப் புரள்வு பொறுப்பு ரூ.12 மில்லியனை விஞ்சாத சிறிய

மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பெறுமதிசேர் வரி மற்றும் நாட்டைக் கட்டியெழுப்பும் வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டன. மறுபுறத்தில் வரி முறைமையை இலகுபடுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி மற்றும் அரச கூட்டுத்தாபனங்களினால் மேற்கொள்ளப்படும் வழங்கல்களுக்கு பெறுமதிசேர் வரியிலிருந்தும் நாட்டைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது. மேலும், புதுப்பிக்கத்தக்க வலு மூலவளங்களை ஊக்குவிப்பதற்காக சூரிய சக்தி தகட்டு மாதிரி அமைப்புக்கள் மற்றும் வீடுகளுக்கான சூரிய சக்தி முறைமைகள் நாட்டைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தும் விலக்குப் பெற்றன. இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரிச் சட்டத்தினை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு பெறுமதிசேர் வரிச் சட்டத்திற்கு பல திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டதுடன் கட்டாயமாகப் பதிவு செய்தலுக்காக தொடர்பான வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டதுடன் இணங்கி நடந்து கொள்ளாதவிடத்து தண்டங்களுக்கான விதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

**உற்பத்தி மற்றும் வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக வரி முறைமையை இலகுபடுத்துவதுடன் இசைந்து செல்லும் விதத்தில் நான்கு பிரிவு தீர்வை அமைப்பு மேலும் திரட்சிப்படுத்தப்பட்டது.** இதன்படி, ஏற்கனவேயுள்ள வரி வீதங்களான 0 சதவீதம், 5 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 30 சதவீதம் என்பன 0 சதவீதம், 7.5 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 25 சதவீதங்களுக்கு திருத்தப்பட்டன. பூச்சிய சதவீதம் உள்ளூரில் தயாரிக்கப்படாத இன்றியமையாத உள்ளீடுகளுக்கு ஏற்புடைத்தானதாக இருந்த வேளையில் 7.5 சதவீதம் மூலப்பொருட்களுக்கும் ஓரளவு மூலப்பொருட்களுக்கும் ஏற்புடைத்தானதாக இருந்தது. இடைநிலைப்பொருட்கள் மற்றும் முடிவுப் பயன்பாட்டுப் பொருட்களுக்கு பிரயோகிக்கத்தக்க தீர்வைகள் முறையே 15 சதவீதமாகவும் 25 சதவீதமாகவும் காணப்பட்டன. மேலும், பன்னாட்டுச் சந்தையில் தங்கத்தின் விலைகள் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக ஆண்டின் முதலரைப் பகுதியில் திடீரென உயர்வடைந்த தங்கத்தின் இறக்குமதிகளை ஊக்கம் குன்றச் செய்யும் நோக்குடன் தங்கத்தின் மீது ஏற்புடைத்தான தீர்வைகள் இரண்டு தடவைகள் திருத்தப்பட்டன. இதற்கமைய, யூனில் தங்க இறக்குமதிகளின் மீது 5 சதவீத சுங்கத் தீர்வையும், சுங்கத் தீர்வைகளின் மீது 100 சதவீத மேலதிக விதிப்புக்களும் விதிக்கப்பட்டன. நவெம்பரில் சுங்கத் தீர்வை 7.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டதுடன் மேலதிக விதிப்புக்கள் முழுமையாக நீக்கப்பட்டன.

**உள்நாட்டு வேளாண்மையைப் பாதுகாப்பதற்காகவும் உள்ளூர் கைத்தொழில்களின் பெறுமதிகூட்டல்களை ஊக்குவிக்கின்ற வேளையில் உள்நாட்டுச் சந்தையில் இன்றியமையாத பண்டங்களின் விலைகளை உறுதிப்படுத்துவதற்காகவும் இவ்வாண்டுப் பகுதியில் சிறப்புப் பண்டத் தீர்வைக்கும் ஏனைய இறக்குமதி தொடர்பான வரிகளுக்கும் பல மாற்றங்கள் செய்யப்பட்டன.** இதற்கமைய, உயர்ந்த உற்பத்தியாளர் இலாபங்களைப் பேணுவதற்கு அவர்களை அனுமதிப்பதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிப்பதற்காக, சீனி, உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டது. மேலும், உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக சிறப்புப் பண்டத் தீர்வை யோகட், வெண்ணெய்க்கட்டி, மாஜரின், தாவர உள்ளீடுகள் மற்றும் உப்பு ஆகிய ஐந்து பண்டங்களுக்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. பறவைக் கொழுப்பு, நுளம்புச் சுருள், மின் கலம்கள் போன்ற பல பொருட்களின் மீது செஸ் வரி விதிக்கப்பட்ட வேளையில் உள்நாட்டு கைத்தொழில்கள் அவற்றின் பெறுமதிகூட்டல்களை உயர்த்துவதனை ஊக்குவிப்பதற்காக வேறு சில பொருட்களின் மீதான செஸ் வரி மேல் நோக்கித் திருத்தப்பட்டது. மிளகு, கறுவா, கராம்பு, சாதிக்காய் மற்றும் ஏலக்காய் என்பனவற்றின் உள்ளூர் பெறுமதிகூட்டலை ஊக்குவிப்பதற்காக அவற்றின் ஏற்றுமதி மீது செஸ் வரி அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், நாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுப் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்காக சூரிய வலு தகட்டு மாதிரி அமைப்புக்கள் மற்றும் துணைப் பொருத்திகள் அல்லது வீடுகளுக்கான சூரிய வலு முறைமைகளின் இறக்குமதிகள் துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வைகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்ட வேளையில் ஆயுர்வேத/ மூலிகை மருத்துவத் தயாரிப்புக்களுக்கு துறைமுக வானூர்திநிலைய சுங்கத் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.

**வரி அரசிறைச் சேகரிப்பினை உயர்த்துவதற்காக, வரி முறைமைக்கு ஏனைய பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இதன்படி, அரச அரசிறையை உயர்த்துவதற்காக சிகரெட்டுக்கள் மற்றும் குடிவகை மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது. குதிரைப் பந்தயம் மற்றும் சூதாட்ட கைத்தொழிலின் வரி அமைப்பு, இந்நடவடிக்கைகளின் மீது விதிக்கப்பட்ட அனைத்து மறைமுக வரிகளுக்கும் பதிலாக அனைத்தையுமுள்ளடக்கிய 5 சதவீதம் கொண்ட தீர்வை மொத்த சேகரிப்பின் மீது அறிமுகப்படுத்தப்பட்டமையுடன் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டது. மேலும், 40 சதவீதம் கொண்ட உயர்ந்த வருமான வரி வீதம், குதிரைப் பந்தய வியாபாரங்களின் மீது பேணப்பட்ட வேளையில், அத்தகைய வியாபாரங்களிலிருந்து அரசிறையை உயர்த்திக் கொள்ளும் நோக்குடன் ஆண்டுதோறும் செலுத்தப்படத்தக்க

தீர்வை அதிகரிக்கப்பட்டது. மாகாண சபையின் அரசிறையாக கருதப்படும் முத்திரைத் தீர்வை காப்புறுதிக் கொள்கைகள், நொத்தாரிசு ஆணை, வர்த்தக வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கான காலாந்தர உரிமங்கள் என்பன மீது மேல் நோக்கித் திருத்தப்பட்டது.

**வரியல்லாப் பக்கத்தில், வரியல்லா அரசிறைச் சேகரிப்புக்களை உயர்த்துவதற்காக பல முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.** இதற்கமைய, விமானநிலைய வெளிச்செல்கை வரி ஐ.அ.டொலர் 10 இலிருந்து ஐ.அ.டொலர் 25 இற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் விசாக் கட்டணம் ஐ.அ.டொலர் 5 இனால் அதிகரிக்கப்பட்டது. மேலும், கம்பனிப் பதிவாளர் நாயகத்தின் திணைக்களம், பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தின் கட்டணம் மற்றும் விதிப்புக்கள், உந்து ஊர்திகளுக்கான நாளேடு பதிவுக் கட்டணம் மற்றும் ஆண்டு அரசிறை உரிமக் கட்டணம் என்பனவும் மேல் நோக்கித் திருத்தப்பட்டன. எனினும், 5+1 உபாயத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் இணையத்தள அகன்றபட்டை வசதிகளை ஊக்குவிக்கும் பொருட்டு இணையத் தள அகன்ற பட்டை இணைப்புக்கள் மீது பிரயோகிக்கத்தக்க தொலைத் தொடர்பூட்டல் தீர்வை 20 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

**வரி நிருவாகத்தையும் அரசிறைச் சேகரிப்புக்களையும் மேம்படுத்துவதற்காக அரசிறைச் சேகரிப்பு முகவர்கள் தமது தகவல்களையும் தொடர்பூட்டல்களையும் தரமுயர்த்திக் கொண்டனர்.** இலங்கைச் சுங்கம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை கணனி வழியில் அதேநேரம் தீர்ப்பனவு செய்வதற்காக “ஆசிக்குடா” உலக கணனி முறைமையை நடைமுறைப்படுத்தியது. ஆசிக்குடா உலக முறைமையானது தொழிற்பாட்டு தாமதங்களை நீக்கியதன் மூலமும் தொழிற்பாட்டுச் செலவுகளைக் குறைத்ததன் மூலமும் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்களின் வினைத்திறனை அதிகரிக்கிறது. மேலும், இலங்கைச் சுங்கம் தொடர்பான பெறுமதிகளிலும் பார்க்கக் குறைந்த பெறுமதியில் வெளிப்படுத்தப்படும் பண்டங்களுக்காக அவற்றின் தொடர்பான பெறுமதிகளை நிறுவியிருக்கிறது. தொடர்பான விலைகளிலும் பார்க்க குறைந்த விலையில் பிரகடனப்படுத்தப்படும் பெறுமதிகள் நுணுகிய ஆய்வுகளுக்காக சிறப்பு அடையாளங்களுடன் அனுப்பப்படுவது இணங்குவிப்புக்களை அதிகரிக்க உதவுகின்றது. கைகளினால் வரிக் கோவைகளை கோவைப்படுத்தும் முறைமையிலுள்ள இடர்ப்பாடுகளை எதிர்கொள்ளும் பொருட்டு உள்நாட்டரசிறைத் திணைக்களம் தன்னியக்கப்படுத்தப்பட்ட வரிக் கொடுப்பனவு முறையொன்றான அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தது. அதேவேளை, வரித் தகவல் சேகரிப்பு நிலையங்களை கணனி மயப்படுத்தி ஒருங்கிணைப்பதன் மூலமாக வரி நிருவாகத்தினையும் சேகரிப்பினையும் மேம்படுத்துவதற்காக கலால் திணைக்களத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**செலவினப் பக்கத்தில், நன்கு முகாமைப்படுத்தப்பட்ட அரச செலவின நிகழ்ச்சித்திட்டமொன்றினைப் பேணுவதற்காக அரசாங்கம் பல வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.** இதன்படி 2013இல் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் இரண்டினதும் முன்மதியுடைய முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் பல கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. மீண்டெழும் செலவின முகாமைத்துவத்தினைப் பொறுத்தவரை, அனைத்து செலவிடல் முகவர்களும் எரிபொருள், மின்வலு, நீர் மற்றும் போக்குவரத்து என்பனவற்றிற்காக ஒதுக்கப்பட்ட ஆண்டு ஒதுக்கு வரையறைகளை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்ற தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை எண் 157 வெளியிடப்பட்டது. மேலும் இன்றியமையாதவைகளுக்கு மட்டும் மேலதிக நேரம் மட்டுப்படுத்தப்பட்டமையின் மூலம் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் கட்டுப்படுத்தப்பட்டன. தொடர் அமைச்சுக்களும் நடுத்தர கால பேரண்ட இறைக் கட்டமைப்புடன் இணங்கிச் செல்லும் விதத்தில் அவற்றின் செலவின நிகழ்ச்சித்திட்டத்தினை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட்டன. அரச துறையில் சரியான நேரத்தில் ஆட்சேர்ப்பு, சிறந்த அரச பணிகளின் வழங்கல் மற்றும் மனித வளங்களின் உத்தம அளவு என்பனவற்றினை உறுதிப்படுத்தும் பொருட்டு அரச துறைப் பதவிகளின் முகாமைத்துவம் முயற்சிகளை மேற்கொண்டது. மேலும், அரச துறைக் கொள்வனவுகளில் சிறந்த நடைமுறைகளை பதியவைக்கும் நோக்குடன் இவ்வாண்டுப் பகுதியில் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. கொள்வனவு திட்டமிடல் குழுவின் மீள்நியமனம், கொள்வனவு செயன்முறையில் போட்டித்தன்மை, வெளிப்படையான தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பனவற்றை அதிகரிப்பதற்காக புதிய கொள்வனவுக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டமை என்பன 2013இல் அரச துறைக் கொள்வனவினை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளில் சிலவாகும். மூலதனச் செலவின முகாமைத்துவத்தின் நியதிகளில், தொடர் அமைச்சுக்கள் ஆரம்பத்தில் அடையாளம் காணப்படாத நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட வரவு

செலவுத்திட்ட ஒதுக்கங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை. செலவிடல் முகவர்களிடமிருந்தான மேலதிக ஒதுக்கங்களுக்கான கோரிக்கையினை மட்டுப்படுத்தும் பொருட்டும் செலவின நிகழ்ச்சித்திட்டத்தில் எதிர்பாராத செலவுகளை மிகக் குறைப்பதன் பொருட்டும் செலவிடல் முகவர்கள் பயன்படுத்தப்படாத ஒதுக்கங்களை அல்லது இன்னமும் தொடங்கப்படாத நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கங்களை பயன்படுத்துவதற்கான சாத்தியங்களைக் கண்டறியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

**அரச துறை ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் ஓய்வூதியப் படிகள் 2013இல் மேல் நோக்கித் திருத்தப்பட்டன.** இதற்கமைய, அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதம் கொண்ட சிறப்புப் படியொன்று குறைந்தபட்சம் மாதமொன்றுக்கு 750 உயர்ந்தபட்சம் மாதமொன்றுக்கு ரூ.2,500 என்ற நிபந்தனைக்குட்பட்டு அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டது. அலுவலர் தரத்திலுள்ள ஊழியர்களுக்கு உத்தேச சம்பள அதிகரிப்பில் 50 சதவீதம் 2013 யூலையிலிருந்து செலுத்தப்பட்டதுடன் மீதி 2013 ஒத்தோபரிலிருந்தும் அலுவலர் தரமல்லா ஊழிர்களுக்கு உத்தேச அதிகரிப்பில் 50 சதவீதம் 2013 மேயிலிருந்தும் மீதி 2013 செத்தெம்பரிலிருந்தும் செலுத்தப்பட்டது. மேலும், வாழ்க்கைச் செலவுப்படி அனைத்து ஊழியர்களுக்கும் மாதமொன்றிற்கு ரூ.750 இனால் அதிகரிக்கப்பட்டது. அதேவேளை, ஓய்வுபெற்றோருக்கு செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி, மாதமொன்றுக்கு ரூ.500 இனால் அதிகரிக்கப்பட்டது. மேலும், 2004 இற்கு முன்னர் ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.750 கொண்ட சிறப்புப் படியொன்று வழங்கப்பட்ட வேளையில் ஓய்வூதிய முரண்பாடுகளை சரிசெய்யும் நோக்குடன் மாதமொன்றுக்கு ரூ.500 கொண்ட தொகை 2005 இலிருந்து 2006 வரை ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், நீதவான்கள், பல்கலைக்கழக கல்விசார் அலுவலர்கள், மருத்துவர்கள் மற்றும் சிறப்பியல்பு சார்ந்த வகையினர் ஆகியோருக்கு செலுத்தப்பட்ட பணிகளுடன் தொடர்புபட்ட படிகள் மேல் நோக்கித் திருத்தப்பட்டதுடன் முன்மொழியப்பட்ட அதிகரிப்பில் 50 சதவீதம் 2013 சனவரியிலிருந்தும் மீதி 2013 யூலையிலிருந்தும் செலுத்தப்பட்டது.

**அரசாங்கம் சமூகத்திலுள்ள பாதிக்கப்படக்கூடிய தொகுதியினருக்கு பல்வேறு உதவுதொகைத் திட்டங்களினூடாக அவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளைத் தொடர்ந்தும் அதிகரித்தது.** சமூகத்திலுள்ள வறிய தொகுதியினருக்கு உதவியளிப்பதற்காக ஏற்கனவேயிருந்த வருமான உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டிலும் தொடர்ந்தன. சமகாலத்தில், "திவிநெகும" மற்றும் "கமநெகும" போன்ற நிகழ்ச்சித்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுடன் வாழ்வாதார அபிவிருத்திக்கான புதிய வழிவகைக்கான ஏற்பாடுகளுடனும் கிராமிய மட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதுடனும் அரசாங்கம் அதன் வறுமைக் குறைப்பு அணுகுமுறையினை நலன்புரிச் சந்தை முறையிலிருந்து அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு மாற்றக்கூடியதாக இருந்தது. வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக சமுர்த்தி அதிகாரசபை, தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றை ஒருங்கிணைப்பதன் மூலமாக நிறுவப்பட்ட "திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம்" என்ற பெயரின் கீழ் புதிய திணைக்களம் நிறுவப்பட்டமையானது வறுமை ஒழிப்பு, நுண்பாக நிதி வசதிகளை வழங்கல் மற்றும் பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் மனித மூலதனம் தொடர்பான அரசின் ஆதரவு முன்முயற்சிகளை அதிகரிக்கும்.

**5+1 மையங்களை அபிவிருத்தி செய்வதன் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தும் நாட்டின் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், வலுவான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு அவசியமான பல உபாய பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல்களை விரைவுபடுத்தியது.** இதற்கமைய, பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் அரச முதலீடுகள் வீதிகள் மற்றும் பாலங்கள், வலு உருவாக்கம், நீர்ப்பாசனம், நீர் வழங்கல், துறைமுகங்கள் மற்றும் வானூர்தி நிலையங்களின் அபிவிருத்தி ஆகிய துறைகளிலுள்ள பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதில் முக்கிய கவனத்தினைச் செலுத்தியது. மேலும், கல்வி, நலன் மற்றும் சமூக நலன்புரி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. அரசாங்கமும் "திவி நெகும", "கமநெகும", "மகநெகும" மற்றும் ஏனைய பிரதேச அபிவிருத்தி முனைவுகள் போன்ற கிராமிய அபிவிருத்தி முனைவுகளுக்கு தொடர்ந்தும் மூலவளங்களை வழிப்படுத்திய வேளையில் "புறநெகும" நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் போன்ற நகர அபிவிருத்தி முனைவுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

**2013ஆம் ஆண்டுப் பகுதியில் அரசிற்குச் சொந்தமான முக்கிய தொழில்முயற்சிகளின் நிதியியல் நிலைமைகள் மேம்பாடடைந்து ஆற்றல் வாய்ந்த தன்மையினை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது.** இதற்கமைய, தெரிந்தெடுக்கப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் ஐந்தொகையினை வலுப்படுத்துவதற்கும் வங்கித்தொழில் முறைக்கான அவற்றின் வெளிப்படுத்துகைகளைக் குறைப்பதற்குமாக இவ்வாண்டுப் பகுதியில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உயர் வருமானத்தினைப் பெறும் பொருட்டும் இலங்கை மின் சபையின் இழப்புக்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் இவ்வாண்டுப் பகுதியில் செலவுச் சிக்கனமான தீர்வை அமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதேவேளை, பெற்றோலிய உற்பத்திகள் தொடர்பில் செய்யப்பட்ட நிருவாக விலைத் திருத்தங்கள் மற்றும் வெப்பவலு உருவாக்கத்திற்காக இலங்கை மின்சபைக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் விற்பனை செய்யப்பட்ட உலை எண்ணெய் மீதான உதவுதொகைகள் நீக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு இழப்புக்கள் 2013இல் குறைக்கப்பட்டன. மற்றைய பல அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் ஆளுகையினையும் வியாபாரத் தொழிற்பாடுகளையும் மேம்படுத்துகின்ற நோக்குடன் பல்வேறு மாற்றங்கள் நடைமுறைக்கிடப்பட்டன. இதற்கமைய, சிறிலங்கன் எயார்லையின்சுக்கு இவ்வாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 235 மில்லியன் கொண்ட மூலதனம் உள்ளீடு செய்யப்பட்டது.

**தனியார் துறை மூலதனத்திற்கு உந்துதலளிக்கும் நோக்குடன் அரசாங்கம் நகர உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதியியல் ஒழுங்குகளை பெருமளவிற்கு வலியுறுத்தியது.** நகர உட்கட்டமைப்பு நிதியிடலுக்காக குத்தகை வாடகையில் தங்கியிருப்பது, கொழும்பு மாநகரிலுள்ள மிக முக்கியத்துவம் வாய்ந்த நிலங்கள் வர்த்தக நோக்கங்களுக்காக தனியார் துறையினருக்கு குத்தகை வழங்கப்பட்டதுடன் அதிகரித்தது. இப்புதிய நிதியிடல் வழிவகையானது, நகரின் வசதி குறைந்த குடியிருப்புக்களுக்குப் பதிலாக, நகரை ஒட்டுமொத்தமாக அழகுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், புதிய தொடர்மாடி மனைகளை நிருமாணிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டமானது தனியார் துறை கட்டடவாளர்களின் நெருங்கிய ஒத்துழைப்புடன் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி, இது வசதி குறைந்த வருமான சமூகத்தினருக்கு நவீன வசதிகளுடன் வீடுகளை வழங்குகின்ற வேளையில் தனியார் துறை உண்மைச் சொத்து அபிவிருத்தி முனைவுகளுக்கு வசதியளிப்பது ஆகிய இரட்டை நோக்கங்களை அடைய வழிவகுத்தது.

**2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மைச்) சட்டத்தின் திருத்தமொன்று 2013இல் மேற்கொள்ளப்பட்டது.** இதற்கமைய, 2013ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மை) (திருத்தச்) சட்டம் இது 2013.01.01 இலிருந்து தொழிற்பாட்டிற்கு வந்தது. இத்திருத்தத்துடன், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கடன்பாடுகளுக்கான அரச உத்தரவாத வழங்கல்களின் வரையறை நடைமுறை நிதியாண்டிற்கும் முற்போந்த இரு ஆண்டுகளுக்குமான சராசரி மொ.உ.உற்பத்திப் பெறுமதியின் 4.5 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. மேலும், இத்திருத்தங்களின்படி இது மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதத்தினை 2013இன் 80 சதவீதத்திலிருந்து 2020இல் 60 சதவீதத்திற்கு குறைப்பதனைத் தேவைப்படுத்துகிறது.

**அரசின் நிதியிடல் தேவைப்பாடுகளை சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் ஈடுசெய்கின்ற வேளையில் இடர்நேர்வுகளை முன்மதியுடைய மட்டத்தில் பேணுவதில் அரச படுகடன் முகாமைத்துவ உபாயங்கள் கவனத்தைச் செலுத்தின.** ஒரே நேரத்தில் பெருந்தொகையான முறிகள் முதிர்ச்சியடைவதனால் ஏற்படும் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக நீண்ட கால திறைசேரி முறிகளைப் பயன்படுத்தி முதிர்ச்சியடைகின்ற திறைசேரி உண்டியல்களின் ஒரு பகுதியை அகற்றுவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் மீண்டும் மீண்டும் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகள் குறைக்கப்பட்டன. இதன்படி, 2013இல் 30 ஆண்டு கால முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன. மேலும், சாதகமான முதலீட்டாளர் மனோபாவத்தின் அநுகூலங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் நீண்ட முதிர்ச்சியையும் தாழ்ந்த விளைவு இலாபத்தையும் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளியிடப்பட்டன. அதேவேளை, இலங்கை அபிவிருத்தி முறிகளை வெளியிடும் வரையறை ஐ.அ.டொலர் 750 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 2,250 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

**பன்னாட்டுத் தரமிடல் முகவர்கள் உறுதிப்படுத்திய நாட்டின் தரமிடல் மேம்பட்ட பேரண்டச் சூழலையும் மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கையினையும் உறுதிப்படுத்தியது.** இதன்படி, ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் உறுதியான தோற்றப்பாட்டுடன்

## சிறப்பு குறிப்பு 8 — முதலீட்டுத் தரத்தை நோக்கி இலங்கை செல்லுதல்

பன்னாட்டு மூலதனச் சந்தைகளுக்குள் ஓர் நாட்டின் நுழைவில் நாட்டிற்கான கொடுகடன் தரமிடல்கள் ஓர் முக்கியமான பங்கை வகிக்கின்றன. கடனை முழுமையாகவும் உரிய நேரத்திலும் மீளச்செலுத்துவதற்கு ஓர் நாட்டின் ஆற்றலும் அனுகூலத்தையும் ஆதரிக்கும் காரணிகள் மீதான தரமிடல் நிறுவனங்களின் கணிப்பீட்டை வழங்குகிறது. பரந்த பொருளாதார, சமூக மற்றும் அரசியல் காரணிகளின் பகுப்பாய்வை அடிப்படையாகக்கொண்டு தரமிடல் நிறுவனங்களால் வடிவமைக்கப்படும் முன்னோக்கிய பார்வைகொண்ட அளவீடுகளாக கொடுகடன் தரமிடல்கள் விளங்குகின்றன. பரந்தளவில் கொடுகடன் தரமிடல்கள் என்பன முதலீடு – தரத்திற்கும் ஊக – தரத்திற்குமிடையிலான வீச்சிலிருந்து, வழங்குநர்களின் கடன்வாங்கும் செலவுகள் மீது முக்கியமான சந்தை விளைவுகளை கொண்டுள்ளன. முதலீடு தர தகுநிலையை அடைவதால் பன்னாட்டு மூலதன சந்தைகளில் நுழைவுள்ள ஓர் நாட்டின் நிதியிடல் செலவுகளை குறைப்பது மட்டுமின்றி ஓர் நாட்டின் முறி வழங்கல்களை கொள்வனவு செய்யக்கூடியவர்களின் சேர்மத்தையும் விரிவடையச்செய்கிறது. முக்கியமான கொடுகடன் தரமிடல் நிறுவனங்கள் - மூடீஸ் முதலீட்டாளர்கள் சேவைகள் (Moody's), ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் (S&P), மற்றும் பிட்ச் தரமிடல்கள் (Fitch) – என்பவையால் கொடுக்கப்படும் தரமிடல்கள் முதலீட்டாளர்களின் அங்கீகரிப்பிற்காக ஒவ்வொரு தரமிடல் அளவுகோலுடன் தொடர்பான உள்ளடக்கமான கருத்துடன் பரந்தளவிலான தகவலை தொகுத்துரைக்கிறது. “BBB/Baa” என்ற தரமிடல் அளவுகோலும் அதற்கு மேற் பட்ட அளவுகோல்களும் முதலீடு தரமாக அங்கீகரிக்கப்படுவதுடன் மூலதனச் சந்தைகளில் ஆக்கிரமிப்பான முதலீட்டாளர் விருப்புச்சார்பை ஈர்க்கிறது.

பல செயலறிவு சார்ந்த ஆராய்ச்சிகளின் அடிப்படையிலான ஜராமில்லோ (2010) இன் விபரமான ஆய்வு நாட்டிற்கான தரமிடல்களின் முக்கியமான அணிக்கோவையை அடையாளப்படுத்துகிறது. இதற்கேற்ப, இலக்கியத்தில் ஓர் நாட்டின் நாட்டிற்கான தரமிடலின் பலமான தூண்டல்களான முக்கிய பேரண்ட மாறிகளாக தலைக்குரிய வருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி, பணவீக்கம், வெளிநாட்டு கடன், பொருளாதார அபிவிருத்தியின் அளவும் மற்றும் ஓர் நாட்டின் தவணைத்தவறல் வரலாறு என்பவை குறிப்பிடப்படுகின்றன. இத்துடன், கண்டறிந்த விடயங்களும் கருத்துரைப்பது யாதெனில் முதலீடுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குமான விகிதம் மற்றும் அரசியல் மாறிகள் என்பன தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் நாட்டிற்கான தரமிடல்களில் முக்கிய பங்கை வகிக்கின்றன.

முக்கியமான தரமிடல் நிறுவனங்களிலிருந்தான நீண்ட-கால வெளிநாட்டு நாணய நாட்டிற்கான தரமிடல் தரவுகள் மீது ஒருமுக நோக்குக் கொண்ட இதே ஆய்வு, முதலீடு தர நிலையின் உள்ளார்ந்த அணிக்கோவைகளின் ஓர் தொகுதியை கண்டறிந்த, பேரண்டப்பொருளாதார குறிகாட்டிகள், உண்மைத்துறை, வெளிநாட்டுத் துறை, அரச துறை, மற்றும் நிதியியல் ஆழம் மற்றம் ஏனைய மாறிகள் உள்ளடக்கப்படபப்ட்டுள்ளதுடன், இவை அட்டவணை சிகு8.1 இல் நாட்டிற்கான தரமிடல் மீதான விளைவின் எதிர்பார்க்கப்பட்ட குறியீட்டுடன் கொடுக்கபட்டுள்ளது. தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் மத்தியில் முதலீட்டுத் தரத்தினை பேணுவதற்கு பலமான தூண்டல்களாக பொதுப் படுகடன் மட்டம், நிதியியல் ஆழம், ஏற்றுமதி மற்றும் அரசியல் வசதி நிலைமை என்பன எல்லா வகையிலும் விரும்பத்தக்க தரமிடலை முன்னேற்றுவதற்கு முயலுகின்றமை கருத்துரைக்கப்பட்ட ஆய்வில் பெருமளவு கண்டறியப்பட்டுள்ளது.

### அட்டவணை சிகு 8.1 — விளக்கப்படுத்தும் மாறிகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் குறியீடு

| | | | |
|---|---|---|---|
| **பேரண்டப்பொருளாதார குறிகாட்டிகள்** | | **அரச துறை** | |
| தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஐ.அ.டொலர்கள்) | + | முதன்மை நிலுவை | + |
| உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி | + | மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வெளிநாட்டுப் பொது படுகடன் | - |
| உள்ளார்ந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி | + | மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உள்நாட்டுப் பொது படுகடன் | - |
| பணவீக்க வீதம் | - | **நிதியியல் ஆழம்** | |
| தொழிலின்மை வீதம் | - | மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விரிந்த பணம் | + |
| **வெளிநாட்டுத் துறை** | | **ஏனையவை** | |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஏற்றுமதிகள் | + | அரசியல் இடர்நேர்வுச் சுட்டெண் ஐசிஆர்ஜி | + |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு நடைமுறைக் கணக்கு நிலுவை | - | (உயர்ந்த சுட்டெண் குறைந்த இடர்நேர்வை குறிக்கிறது) | |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தனியார் வெளிநாட்டுக் கடன் | - | தவணைத் தவறல் வரலாறு | - |
| மொ.உ.உற்பத்திக்கு தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் | + | பிரதேச மற்றும் நேர போலி மாறிகள் | |

குறிப்பு: முதலீட்டுத் தர தகுநிலை மீதான பாதிப்பை ஒவ்வொரு விளக்கப்படுத்தும் மாறிகளின் குறியீடு குறிக்கிறது

முதலீடு தர நிலையை மீது இயலாற்றல்கொண்ட அணிக்கோவைகளை பார்க்கும்போது, எல்லா வகையிலும் இலங்கை திருப்திகரமாக செயலாற்றியுள்ளது. பெருமளவிலான இயலாற்றல் மிக்க அணிக்கோவைகளில் கணிசமான முன்னேற்றம் பதிவுசெய்யப்பட்டு நடுக்கால பேரண்டப்பொருளாதார இலக்குகளை எய்துவதற்கான வலுவான நிலைமையில் இலங்கையை நிறுத்தியுள்ளது. இயலாற்றல்மிக்க அணிக்கோவைகள் மற்றும் நடுக்கால இலக்குகள் அட்டவணை சிகு8.2 இல் வழங்கப்பட்டுள்ளன.

### அட்டவணை சிகு 8.2 — இலங்கை: பொருளாதார குறிகாட்டிகள்

| குறிகாட்டி | 2005 | 2012 | 2013 தற்காலிக -மானது | 2016 எறிவு செய்யப்பட்டது |
|---|---|---|---|---|
| **உண்மைத்துறை** | | | | |
| தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஐ.அ.டொலர்கள்) | 1,241 | 2,922 | 3,280 | 4,825 |
| உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி (%) | 6.2 | 6.3 | 7.3 | 8.3 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுருக்கி (%) | 10.4 | 8.9 | 6.7 | 5.0 |
| தொழிலின்மை வீதம் (%) | 7.2 | 4.0 | 4.4 | வி.கி. |
| **வெளிநாட்டுத்துறை** | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் (%) | 32.3 | 22.8 | 22.4 | 24.7 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு நடைமுறைக் கணக்கு நிலுவை (%) | -2.7 | -6.7 | -3.9 | 0.1 |
| **அரசத் துறை** | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு திரண்ட வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை (%) | -7.0 | -6.4 | -5.9 | -3.8 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பொது படுகடன் (%) | 90.6 | 79.1 | 78.3 | 65.0 |
| **நிதியியல் ஆழம்** | | | | |
| விரிந்த பணத்தின் வளர்ச்சி (%) | 19.1 | 17.6 | 16.7 | 14.0 |
| **ஏனையவை** | | | | |
| தவணைத் தவறல் வரலாறு | இல்லை | இல்லை | இல்லை | வி.கி. |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அண்மைக் காலங்களில், இலங்கையின் பொருளாதார செயலாற்றம் உயர்ந்த வளர்ச்சிப் பாதையுடன் புதிய உந்துகைத் துறைகளுக்குள் பொருளாதார நடவடிக்கையின் பல்வகைப்படுத்தல் காணப்பட்டது. 2010-2013 காலப்பகுதியில் பொருளாதாரம் 7.5 சதவீத சராசரி வளர்ச்சியை பதிவுசெய்தது. பிராந்திய மெதுவடைந்த போக்கை எதிர்த்து ஆசியாவின் சிறந்து செயலாற்றும் பொருளாதாரங்களில் ஒன்றாக தொடர்ந்திருந்து, 2013 இல் பொருளாதாரம் 7.3 சதவீதத்தால் விரிவடைந்தது. 2014 – 16 காலப்பகுதியில் பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திய வளர்ச்சி உள்ளாற்றல் 7.8 சதவீதத்திற்கு மேலான போக்கிலுள்ளது. அரச துறையில், 2006-2013 காலப்பகுதியில் சாராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.2 சதவீத வலியத்தாக்கமான பொது முதலீடு அழுத்தம் மூலமாகவே இலங்கையின் உட்கட்டமைப்பு முதலீடுகள் நிதியிடப்பட்டன. உயர்ந்தளவிலான பொது முதலீடு ஒதுக்கல்களிருந்தும், கடந்த 5 ஆண்டுகளாக இறைப் பற்றாக்குறை படிப்படியாக குறைந்து அரசாங்கம் இறைப் பற்றாக்குறை இலக்குகளை தொடர்ந்தும் எய்தியது. இவ் வகையில், கடந்த தசாப்தகாலமாக இலங்கையின் பொதுப் படுகடன் மட்டங்கள் கணிசமாக முன்னேறி 2013 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 78.3 சதவீதத்தை பதிவுசெய்தது. இலங்கையின் கொடுகடன் தகுதியில் இன்னுமொரு நேர்மறையான காரணியாகும். நடுத்தரக் காலத்தில், 2014 இல் இலங்கை தனது நேர்மறையான சிறிய முதன்மை நிலுவையை வலுப்படுத்த எதிர்பார்ப்பதுடன் 2016ற்குள் படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தின் மட்டத்தை 65 சதவீதமாக கணிசமாக குறைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளது.

ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மேலும் வலுவடைய எதிர்பார்க்கபடுவதால், தற்போதுள்ள மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11.3 சதவீத மட்டத்திலுள்ள வர்த்தக நிலுவை 2016ற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 7.2 சதவீதமாக முன்னேற்றமடையும். முக்கியமாக வர்த்தக நிலுவை மற்றும் சேவையிலிருந்தான வர்த்தக வருவாய்களின் முன்னேற்றத்தின் உந்துதலால் 2013 இல் நடைமுறைக் கணக்கு நிலுவை 2016 இல் ஓர் சமநிலைமைக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. உட்கட்டமைப்பு மற்றும் பெறுமதிச் சங்கிலி தொழிற்முயற்சிகள் மீதான தொடர்ச்சியான முதலீடுடன் உற்பத்தித்திறன் முன்னேற்றங்கள் மற்றும் திறந்த மற்றும் இலவச துறைமுகங்கள் மூலமான மேம்பட்ட வர்த்தக இயல்புச்செயல் என்பன உள்நாட்டு தொழிற்முயற்சிகளின் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கு உதவியுள்ளது. மேலும், அண்மைக் காலங்களில் கவனித்ததுபோல், உயர்ந்தளவிலான அரசியல் உறுதி என்ற முக்கிய நன்மை இலங்கைக்கு உள்ளதுடன் தீர்மானமான கொள்கை திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் ஒப்பிய பொறுப்புமுள்ளது.

அண்மைக் காலங்களில் எறிவுசெய்யப்பட்ட திசையில் சகல பேரண்டப்பொருளாதார மாறிகளிலான மேம்பாடு மற்றும் நேர்மறையான தோற்றப்பாடு முதலீட்டு தரத்திலான நாடாக இலங்கையை உருவாக்கும் சாத்தியங்களுடன் அண்மைக்கால இலக்கியங்களில் கலந்துரையாடப்பட்ட உள்ளார்ந்த அணிக்கோவைகளின் மேலதிகமான ஒருங்கிணைப்பையும் இயலச்செய்யும்.

உசாத்துணைகள்

Archer, Candace C., Glen Biglaise, and Karl DeRouen Jr., 2007, "Sovereign Bonds and the Democratic Advantage: Does Regime Type Affect Credit Rating Agency Ratings in the Developing World" International Organization: 61.

Jaramillo, Laura, 2010, "Determinants of Investment Grade Status in Emerging Markets" IMF Working Paper 10/117.

Mellios, Constantin, and E. Paget-Blanc, 2006, "Which Factors Determine Sovereign Credit Ratings" The European Journal of Finance, Vol. 12, No. 4, pp. 361–377.

Rowland, Peter, 2004, "Determinants of Spread, Credit Ratings and Creditworthiness for Emerging Market Sovereign Debt: A Follow-up Study Using Pooled Data Analysis," Borradores de Economía No. 296, Banco de la República de Colombia.

நீண்ட கால நாட்டிற்கான கொடுகடன் தரமிடலை "பீ+" இல் உறுதிப்படுத்திய வேளையில் பிட்ஜ் ரேடிங் உறுதியான தோற்றப்பாட்டுடன் இலங்கையை "பீபீ-" இல் உறுதிப்படுத்தியது. எனினும் மூடி இன்வெஸ்டர் சேர்விஸ் இலங்கை தொடர்பான அதன் தோற்றப்பாட்டினை "பீ1" வெளிநாட்டு நாணய நாட்டிற்கான தரமிடலைச் சாதகமான தன்மையிலிருந்து உறுதியான தன்மைக்கு மாற்றிக் கொண்டதுடன் அதன் வெளிநாட்டு நாணய அரச முறிகளின் தரமிடலை "பீ1" இல் உறுதிப்படுத்தியது.

சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் துறை, பெருந்தோட்டம், கட்டடவாக்கக் கைத்தொழில்கள் மற்றும் தயாரிப்புக் கைத்தொழில்களுக்கு நீண்ட கால நிதியிடலை வழங்கும் விதத்தில், வங்கித்தொழில் துறை அதன் மூலதனவாக்கத்தின் ஒரு பகுதியாக நீண்ட கால வெளிநாட்டு நிதிகளைத் திரட்டுவதற்கு அரசாங்கம் வசதியளித்தது. இதற்கமைய, தேசிய சேமிப்பு வங்கி 5 ஆண்டுகள் முதிர்ச்சிகளுடன் ஐ.அ.டொலர் 750 மில்லியன் கொண்ட பன்னாட்டு முறிகளை வழங்கியது. உள்நாட்டு முறிகளை (இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் திறைசேரி முறிகள்) மிதக்கவிட்டதன் மூலம் அரசாங்கம் வழங்கல்களுக்கு உதவியதுடன் தேசிய சேமிப்பு வங்கி, முறிகளின் பெறுகைகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு முழுமையாகப் பயன்படுத்தப்படும் வரை அவற்றின் மிகை நிதியங்களை முதலீடு செய்வதனை இயலச் செய்தது.

## 6.3 அரசாங்க வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

### அரசிறையும் கொடைகளும்

#### அரசிறை


மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசிறை, கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 13.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 13.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு வரி அரசிறை மற்றும் வரியல்லா அரசிறை இரண்டும் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். எனினும், பெயரளவு நியதிகளில் மொத்த அரசிறை

முன்னைய ஆண்டின் ரூ.1,051.5 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.1,137.4 பில்லியனுக்கு 8.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசிறையில் ஏற்பட்ட இக்குறிப்பிடத்தக்க செயலாற்றத்திற்கு, உலகளாவிய பொருளாதாரத்தில் ஏற்பட்ட படிப்படியான மீட்சியின் ஆதரவுடன் பொருளாதார நடவடிக்கைகள் உயர்வடையத் தொடங்கியமையின் விளைவாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட சாதகமான செயலாற்றமே முக்கிய காரணமாகும். உழைக்கும் போதே செலுத்தும் வரி, பிடித்துவைத்தல் வரி, உள்நாட்டு நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டின் மீதுமான பெறுமதிசேர் வரி, சிறப்புப் பண்டத் தீர்வை மற்றும் ஊர்திகள் மீதான உற்பத்தி வரி என்பன உட்பட கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரிகளிலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டது. அதேவேளை, குறிப்பாக, பொருளாதார பணிக் கட்டணம் மற்றும் துறைமுக வானூர்திநிலையத் தீர்வை என்பனவற்றிலிருந்தான வரி அரசிறையில் வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசிறை வீழ்ச்சியடைந்தமைக்கு 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தமை, வியாபாரத் துறைக்கு வழங்கப்பட்ட வரி விடுப்புக்களின் விரிவாக்கம் மற்றும் உற்பத்தியையும் பெறுமதிகூட்டல்களையும் ஊக்குவிப்பதற்காக இவ்வாண்டுப் பகுதியில் தெரிந்தெடுக்கப்பட்ட துறைகளுக்கு வழங்கப்பட்ட விரி விலக்கல்கள் மற்றும் சலுகைகள் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் அதேபோன்று பெயரளவு நியதிகளிலும் வரியல்லா அரசிறை வீழ்ச்சியடைந்தமைக்கு மத்திய வங்கி உட்பட அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களிலிருந்தான இலாபம் மற்றும் பங்கிலாபங்களின் மாற்றல்கள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறையில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு, வரி அரசிறை 2012இன் மொ.உ.உற்பத்தியின் 12.0 சதவீதத்திலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியின் 11.6 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தமையின் மூலம் தொடர்ந்தது.** பெயரளவு நியதிகளில் சேகரிக்கப்பட்ட உண்மையான வரி அரசிறை ரூ.1,005.9 பில்லியனாக அமைந்து எதிர்பார்க்கப்பட்ட வரவு செலவுத்திட்ட இலக்கான ரூ.1,131 பில்லியனிலிருந்தும் பிறழ்ந்தமைக்கு பொருளாதாரப் பணிக் கட்டணம், துறைமுகம் மற்றும் வானூர்திநிலையத் தீர்வை என்பனவற்றிலிருந்தான அரசிறை வீழ்ச்சியடைந்தமையும் பெற்றோலிய உற்பத்திகள் மீதான உற்பத்தி வரியிலிருந்தான குறைந்த அரசிறைச் சேகரிப்புக்களும் காரணங்களாக விளங்கின. எனினும், மொத்த அரசிறையில் வரி அரசிறையின் பங்கு 2012இன் 86.4 சதவீதத்திலிருந்து 88.4 சதவீதத்திற்கு குறைந்தளவில் அதிகரித்தது.

**வருமான வரிகளிலிருந்தான அரசிறை அதிகரித்து பொருளாதாரப் பணிக் கட்டணம் தவிர்ந்த அனைத்து வருமான வரி வகைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தமைக்கு அதிகரித்த உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளும் அரச பிணையங்களின் வெளியீடுகளிலிருந்து உயர்ந்தளவில் சேகரிக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரி என்பனவே முக்கிய காரணங்களாகும். அரச பிணையங்களில் காணப்பட்ட முதலீடுகளுமே முக்கிய காரணங்களாகும்.** இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வருமான வரிகளிலிருந்தான அரசிறை 2.4 சதவீதத்திலிருந்து 0.1 சதவீதத்தினால் சிறிதளவிலும் பெயரளவு நியதிகளில் 2013இன் ரூ.205.7 பில்லியனுக்கு 19.2 சதவீதத்தினாலும் அதிகரித்தது. கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரிகள் 2013இல் ரூ.23.1 சதவீதத்தால் ரூ.102.6 பில்லியனுக்கு அதிகரித்ததுடன், வர்த்தக வங்கித்தொழில், நிதி மற்றும் காப்புறுதி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகம், புகையிலை மற்றும் வெறியக் குடிவகைகள் மற்றும் தயாரிப்புத் துறைகள் என்பன இம்முன்னேற்றத்திற்கு முக்கியமாக காரணங்களாக விளங்கின. பிடித்துவைத்தல் வரியிலிருந்தான அரசிறை பெயரளவு நியதிகளில் ரூ.77.9 பில்லியனுக்கு 30.7 சதவீதத்தினால் அதிகரித்ததன் மூலம் வரி அரசிறையில் அதன் பங்கு 2012இன் 6.6 சதவீதத்திலிருந்து 2013இல் 7.7 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு நீண்ட முதிர்ச்சிகளுடன் கூடிய அரச பிணையங்களின் வழங்கலில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பே காரணமாகும். மேலும், உழைக்கும் போதே செலுத்தும் வரியிலிருந்தான வரி அரசறை பெயரளவு நியதிகளில் 25 சதவீதத்திற்கும் கூடுதலாக

வரைபடம் 6.2 அரசின் அரசிறை உள்ளடக்கம் - 2013



**அட்டவணை 6.2 அரசிறையின் பொருளாதாரப் பகுப்பாய்வு**

| விடயம் | 2012 | 2013 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2013 தற்காலிக மானவை | 2014 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| | ரூ. மில்லியன் | | | |
| **வரி அரசிறை (அ)** | **908,913** | **1,131,041** | **1,005,895** | **1,274,600** |
| வருமான வரிகள் | 172,563 | 221,984 | 205,666 | 283,318 |
| பெ.கூ.வ | 229,604 | 283,354 | 250,757 | 303,232 |
| கலால் வரிகள் | 223,960 | 247,256 | 250,700 | 266,333 |
| இறக்குமதித் தீர்வை | 80,155 | 97,303 | 83,123 | 94,556 |
| ஏனைய வரிகள் | 202,631 | 281,144 | 215,649 | 327,161 |
| **வரியல்லா அரசிறை** | **142,547** | **126,503** | **131,552** | **162,893** |
| **மொத்த அரசிறை** | **1,051,460** | **1,257,544** | **1,137,447** | **1,437,493** |
| | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | | |
| **வரி அரசிறை (அ)** | **12.0** | **13.0** | **11.6** | **12.8** |
| வருமான வரிகள் | 2.3 | 2.6 | 2.4 | 2.9 |
| பெ.கூ.வ | 3.0 | 3.3 | 2.9 | 3.1 |
| கலால் வரிகள் | 3.0 | 2.8 | 2.9 | 2.7 |
| இறக்குமதித் வரிகள் | 1.1 | 1.1 | 1.0 | 1.0 |
| ஏனைய வரிகள் | 2.7 | 3.2 | 2.5 | 3.3 |
| **வரியல்லா அரசிறை** | **1.9** | **1.5** | **1.5** | **1.6** |
| **மொத்த அரசிறை** | **13.9** | **14.5** | **13.1** | **14.5** |

(அ) குறிப்பிட்ட செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட பெறுமதி சேர் வரிவிலக்கு அளவு மற்றும் பொது ஊழியர்களால் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகைகளின் அளவு உள்ளடங்களாக.

மூலம் : நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

அதிகரித்து ரூ.18.6 பில்லியனைப் பதிவு செய்தது. எனினும், பொருளாதாரப் பணிக் கட்டணத்திலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறை 2013இல் ரூ.6.6 பில்லியனுக்கு 55.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வருமான வரிக்கு உட்பட்டிருந்த வியாபாரங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட விலக்கல்கள் மற்றும் 2012 ஏப்பிறல் 1 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ரூ 25 மில்லியனிலிருந்து ரூ 50இற்கு காலாண்டு மட்டத்தில் அதிகரித்தமை என்பன முக்கிய காரணங்களாகும்.

**அண்மைய வரிச் சீர்திருத்தங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் பெறுமதிசேர் வரித் தளத்தில் ஏற்பட்ட விரிவாக்கம் பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை அதிகரிப்பதற்கு முக்கியமாகப் பங்களித்தது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை 2013இல் 2.9 சதவீதத்திற்கு 0.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும், பெயரளவு நியதிகளில் இது 2012இன் ரூ.229.6 பில்லியனிலிருந்து ரூ.250.8 பில்லியனுக்கு 9.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இது முக்கியமாக காலாண்டு மொத்தப் புரள்வு ரூ.500 மில்லியனை விஞ்சிய மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரத்தின் மீது பெறுமதிசேரி வரி விதிக்கப்பட்டதன் காரணமாக பெறுமதிசேர் வரித் தளம் விரிவடைந்தமையின் மூலமும் குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்ததன் மூலமும் அடையப்பட்டது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட பெறுமதிசேர் வரி 2013இல் மாற்றமின்றியிருந்த போதும் பெயரளவு நியதிகளில் இது ரூ.124.4 பில்லியனுக்கு 13.8 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், இறக்குமதியிலிருந்தான பெறுமதிசேர் வரி அரசிறை பெயரளவு நியதிகளில் ரூ.126.3 பில்லியனுக்கு 5.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

**நெகிழ்ச்சியற்றதன்மை கொண்ட பொருட்களின் மீது விதிக்கப்படுகின்ற உற்பத்தித் தீர்வைகள், உற்பத்தித் தீர்வை வீதங்கள் மேல் நோக்கித் திருத்தப்பட்டமை, உற்பத்தி மற்றும் இப்பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூடியளவு அரசிறையை உருவாக்க வழிவகுத்தன.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உற்பத்தித் தீர்வைகளிலிருந்தான அரசிறை, 2013இல் 0.1 சதவீதத்தினால் 2.9 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்த போதும் பெயரளவு நியதிகளில், இது, முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.224 பில்லியனிலிருந்து ரூ.250.7 பில்லியனுக்கு 11.9 சதவீதத்தினால் அதிகரித்தது. உற்பத்தித் தீர்வை வீதங்களிலான அதிகரிப்பு மற்றும் உந்து ஊர்திகளின் இறக்குமதிகளிலான 17.6 சதவீத சடுதியான அதிகரிப்பு என்பன உந்து ஊர்திகளிலிருந்தான உற்பத்தி வரிச் சேகரிப்பு ரூ.96.5 பில்லியனுக்கு 22.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்குப் பங்களித்தன. மேலும், கலால் தீர்வையில் செய்யப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்கள் மற்றும் தேறல் குடிவகை உற்பத்தி 2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் 21 சதவீதத்தினால் அதிகரித்தமை என்பன குடிவகை மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 9.9 சதவீதத்தினால் ரூ.66 பில்லியனுக்கு அதிகரிப்பதற்குப் பங்களித்தது. பெயரளவு நியதிகளில் சிகரெட்டுக்கள் மற்றும் புகையிலை மீதான கலால் தீர்வைகள் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.53.6 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.58.6 பில்லியனுக்கு 9.3 சதவீதத்தினால் அதிகரித்தது. 2013இல் சிகரெட் விற்பனை 6.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் சிகரெட்டிற்கு பிரயோகிக்கத்தக்க அதிகரித்த கலால் தீர்வைகள் வரி அரசிறைச் சேகரிப்பின் அதிகரிப்பிற்கு வழிவகுத்தன. இருப்பினும், வரி அரசிறையில் கலால் தீர்வையிலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறையின் பங்கு 2012இன் 24.6 சதவீதத்திலிருந்து 2013இல் 24.9 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

**உள்நாட்டு உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் பாதுகாக்கின்ற வேளையில் கூடியளவு அரசிறையையும் உருவாக்கும் பொருட்டு இறக்குமதித் தீர்வைகளும் சிறப்புப் பண்டத் தீர்வைகளும் இறக்குமதி அளவினைக் கட்டுப்படுத்தும் காலாந்தரக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன.**

மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இறக்குமதித் தீர்வை மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வை இரண்டிலுமிருந்தான அரசிறை 2013இல் 1.5 சதவீதத்தில் மாற்றமின்றி காணப்பட்ட வேளையில் பெயரளவு நியதிகளில் இவ்விரண்டு வரிகளிலுமிருந்தான அரசிறை 2013இல் ரூ.129.8 பில்லியனுக்கு 14.1 சதவீதத்தினால் அதிகரித்தது. இறக்குமதித் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.83.1 பில்லியனுக்கு 3.7 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்தமைக்கு குறைவான இறக்குமதித் தீர்வைகளும் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புக்களுமே முக்கிய காரணங்களாக அமைந்தன. இதன்படி, வரி அரசிறையின் சதவீதமாக இறக்குமதித் தீர்வைகள் முன்னைய ஆண்டின் 8.8 சதவீதத்திலிருந்து 2013இல் 8.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.46.7 மில்லியனுக்கு 38.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு குறிப்பிட்ட சில விடயங்களுக்கு ஏற்புடைத்தான சிறப்புப் பண்டத் தீர்வை மேல் நோக்கித் திருத்தப்பட்டமையும் தெரிந்தெடுக்கப்பட்ட புதிய விடயங்களின் மீது சிறப்புப் பண்டத் தீர்வை விதிக்கப்பட்டமையும் முக்கிய காரணங்களாயமைந்தன. இதன்படி, வரி அரசிறையில் சிறப்புப் பண்டத் தீர்வையின் பங்கு 2012இன் 3.7 சதவீதத்திலிருந்து 2013இல் 4.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**நாட்டைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் மெதுவான வளர்ச்சியைக் கட்டியமைக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புக்களே முக்கிய காரணமாகும்.** இதன்படி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறை மொ.உ.உற்பத்தியில் 0.5 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்ததுடன் பெயரளவு நியதிகளில் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.38.7 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.40.9 பில்லியனுக்கு 5.7 சதவீதத்தினால் அதிகரித்தது. உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் பணிகளினூடான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறை 9.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2013இல் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் திடீரென அதிகரிக்கத் தொடங்கியமையே காரணமாகும். எனினும். இறக்குமதிகளினூடான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறையில் சிறிதளவு வளர்ச்சி பதிவு செய்யப்பட்டமையானது இறக்குமதியில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சியைப் பிரதிபலித்தது. இதன்படி, மொத்த வரி அரசிறையில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் பங்கு 2012இன் 4.3 சதவீதத்திலிருந்து 2013இல் 4.1 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

**2013ஆம் ஆண்டுப் பகுதியில் ஏனைய வரிகளிலிருந்தான அரசிறை, கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக துறைமுகம், வானூர்தி நிலையத் தீர்வை 2012இன் 0.9 சதவீதத்திலிருந்து 2013இல் 0.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் பெயரளவு நியதிகளிலும் கூட இது ரூ.70.1 பில்லியனிலிருந்து ரூ.61.5 பில்லியனுக்கு 12.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வான் எரிபொருள் மீதான துறைமுகம் மற்றும் வானூர்திநிலையத் தீர்வை அகற்றப்பட்டமையும் புடவைகள் மற்றும் ஆடைக் கைத்தொழிலுக்கான நுகரத்தக்க விடயங்களுக்கு ஏற்புடைத்தான துறைமுக மற்றும் வானூர்திநிலைய தீர்வை வீதம் குறைக்கப்பட்டமையும் முக்கிய காரணங்களாகும். செஸ் தீர்வையிலிருந்தான அரசிறைச் சேகரிப்பு ரூ.36.1 பில்லியனுக்கு 10.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இவ்வாண்டுப் பகுதியில் புதிய விடயங்களின் மீதான செஸ்தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டமையும் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களின் மீதான செஸ் தீர்வை அதிகரிக்கப்பட்டமையும் முக்கிய காரணங்களாக அமைந்தன. தொலைபேசி அடர்த்தி 2012 உடன் ஒப்பிடுகையில் குறைவாகக் காணப்பட்ட போதும் தொலைத் தொடர்பூட்டல் துறையிலிருந்தான அரசிறை பெயரளவு நியதிகளில் 2013இல் ரூ.24.4 பில்லியனுக்கு 9.7 சதவீதத்தினால் அதிகரித்தது. உரிம வரிகளும் ஏனைய வரி அரசிறைகளும் கூட பெயரளவு நியதிகளில் ரூ.6 பில்லியனுக்கு 17.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்துடன் தொடர்பான பதிவுக் கட்டணத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

**வரியல்லா அரசிறையும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் அதேபோன்று பெயரளவு நியதிகளிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தமைக்கு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்து உருவாக்கப்பட்ட குறைந்த இலாபமும் பங்கிலாபமும் முக்கிய காரணங்களாயமைந்தன.** இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரியல்லா அரசிறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட1.9 சதவீதத்திலிருந்த 1.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் பெயரளவு நியதிகளில் இது ரூ.131.6 பில்லியனுக்கு 7.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், இது 2013இல் வரவு செலவுத்திட்ட இலக்கான ரூ.126.5 பில்லியனை விஞ்சியது. மத்திய வங்கியிலிருந்தான இலாப மாற்றல்கள் 2012இல் பதிவு செய்யப்பட்ட ரூ.43 பில்லியனிலிருந்து ரூ.26.4 பில்லியனுக்கு 38.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை ஏனைய அரசிற்குச் சொந்தமான

தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபங்களும் பங்கிலாப மாற்றல்களும் முன்னைய ஆண்டின் ரூ.46.8 பில்லியனிலிருந்து ரூ.35.2 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருந்தன. எனினும், கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களிலிருந்தான அரசிறை 54.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு தெரிவுசெய்யப்பட்ட உரிமக் கட்டணம் மற்றும் கட்டணங்கள் மேல் நோக்கித் திருத்தப்பட்ட வேளையில் வட்டி மற்றும் வாடகையிலிருந்தான அரசிறை 2.7 சதவீதத்தினால் அதிகரித்தமையே காரணமாகும். மொத்த அரசிறையில் வரியல்லா அரசிறையின் பங்கும் 2012இன் 13.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 11.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## கொடைகள்

**2013இல் வெளிநாட்டுக் கொடைகளின் பகிர்ந்தளிப்பு முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.16.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 15.9 பில்லியனுக்கு 1.3 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்ததுடன் இது, ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீடான ரூ.20 பில்லியனுக்கும் குறைவாகவும் இருந்தது.** பல்புடை கொண்ட வழங்குநர்களிடமிருந்தான வெளிநாட்டுக் கொடைகள் 2012இன் ரூ.7.4 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.6.5 பில்லியனுக்கு 12.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்ததுடன், இதன் விளைவாக, மொத்தக் கொடைகளில் பல்புடை மூலங்களிலிருந்தான கொடைகளின் பங்கு 2012இன் 46 சதவீதத்திலிருந்து 41 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2013இல் இருபுடை மூலங்களிலிருந்தான கொடை 2012இன் ரூ.8.6 பில்லியனிலிருந்து ரூ.9.3 பில்லியனுக்கு 8 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது.


## செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல்

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் வீழ்ச்சியடைந்து, மீண்டெழும் செலவினத்தைச் சிக்கனப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகளையும் அதேவேளையில் அரச முதலீடுகள் உபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் தொடர்ச்சியாகப் பேணப்பட்டமையினையும் பிரதிபலித்தது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, இது 2012இன் 20.5 சதவீதத்திலிருந்து 2013இல் 19.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவினத்திலும் தேறிய கடன் வழங்கலிலும் ஏற்பட்ட குறைப்பு, மீண்டெழும் செலவினம் 1.1 சதவீதத்தினாலும் மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 0.3 சதவீதப் புள்ளியினாலும் குறைவடைந்தமையின் இணைந்த விளைவாகும். இருப்பினும், பெயரளவு நியதிகளில் மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2012இன் ரூ.1,556.5 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.1,669.4 பில்லியனுக்கு 7.3 சதவீதத்தினால் (ரூ.112.9 பில்லியன்) அதிகரித்தன.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் வீழ்ச்சியடைந்து, நடுத்தர காலத்தில் மீண்டெழும் செலவினத்தை மேலும் சிக்கனப்படுத்துவதனை நோக்கிய அரசின் கடப்பாடுகளை எடுத்துக்காட்டியது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2012இன் 14.9 சதவீதத்திலிருந்து 2013இல் 13.9 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. பெயரளவு நியதிகளில், 2013இல் மீண்டெழும் செலவினம் 2012இன் ரூ.1,131 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,205.2 பில்லியனுக்கு 6.6 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், 2013இல் மீண்டெழும் செலவினம் இவ்வாண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஆரம்ப மதிப்பீடான ரூ.1,267.4 பில்லியனை விடக் குறைவாகவே காணப்பட்டது. சம்பளங்கள் மற்றும் கூலிகள், வட்டிக் கொடுப்பனவுகள், நடைமுறை மாற்றல்கள் மற்றும் உதவுதொகைகளின் மீது பதிவு செய்யப்பட்ட செலவினத்தில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் ஏனைய பொருட்கள் மற்றும் பணிகளின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, 2013இல் மீண்டெழும் செலவினத்தில் மிதமான பெயரளவு அதிகரிப்பு ஏற்பட உதவியது.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வட்டிச் செலவினம் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டுச் சந்தையில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டி வீதங்கள், மொத்த உள்நாட்டுப் படுகடன் இருப்பில் குறுங்கால படுகடனின் பங்கினைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளுடன் சேர்ந்து கொண்டமையே காரணமாகும்.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, வட்டிச் செலவினம் பொருளாதார வகைப்படுத்தல்களின் நியதிகளில் 2012இன் மொ.உ.உற்பத்தியின் 5.4 சதவீதத்திலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியின் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், பெயரளவு நியதிகளில் வட்டிச் செலவினம் 2012இன் ரூ.408.5 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.444 பில்லியனாக 8.7 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளையில், வட்டிக் கொடுப்பனவு தனியொரு பாரிய மீண்டெழும் செலவின விடயமாகத் தொடர்ந்தும் விளங்கி முன்னைய ஆண்டில் 36.1 சதவீதத்திலிருந்து அதிகரித்து மொத்த மீண்டெழும் செலவினத்தில் 36.8 சதவீதத்திற்கு வகைகூறியது. பெயரளவு நியதிகளில் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2012இன் ரூ.317.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ரூ.343

**வரைபடம் 6.3 அரச நடைமுறைச் செலவினத்தின் உள்ளடக்கம் - 2013**




பில்லியனுக்கு 8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2013இல் ரூ.101 பில்லியனுக்கு 11.2 சதவீதத்தினால் அதிகரித்தன. உள்நாட்டுப் படுகடன் மீதான சராசரி வட்டி வீதம் முன்னைய ஆண்டின் 11.3 சதவீதத்திலிருந்து 2013இல் 8.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதும், உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, 2013இல் உள்நாட்டுப் படுகடன் இருப்பு 18.6 சதவீதத்தினால் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். மேலும், திறைசேரி முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவு 2013இல் ரூ.254.1 பில்லியனுக்கு 11.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முக்கிய கடன்பாட்டுச் சாதனமாக திறைசேரி முறிகள் பயன்படுத்தப்பட்டமையே காரணமாகும். இது வெளிநின்ற திறைசேரி முறிகளின் இருப்பினை 2012இல் 15.2 சதவீதத்தினாலும் 2013இல் 17.1 சதவீதத்தினாலும் அதிகரித்தது. திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2013இல் ரூ.69.7 பில்லியனுக்கு 7.2 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தன. இதன்படி, மிதமான அதிகரிப்பு, திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற இருப்பு 2012இல் 6.5 சதவீதத்தினாலும் 2013இல் 11.3 சதவீதத்தினாலும் அதிகரித்தமையினதும் 2012இன் இறுதியிலிருந்து நாணயக் கொள்கை நிலை தளர்த்தப்பட்டமையுடன் உள்நாட்டுச் சந்தையில் வட்டி வீதங்கள் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருந்தமையினதும் இணைந்த விளைவாகும். ரூபாக் கடன்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முறையே ரூ.6.1 பில்லியனாகவும் ரூ.10.8 பில்லியனாகவும் காணப்பட்டன. அதேவேளை, மொத்த வட்டிக் கொடுப்பனவுகளில் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளின் பங்கு முன்னைய ஆண்டின் 77.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 77.3 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, 2013இல் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு 7.1 சதவீதத்தினால் அதிகரித்தமையும் தாழ்ந்த மத்திய தர வருமான நாடு என்ற அந்தஸ்தை நாடு பெற்றுக் கொண்டதன் காரணமாக சலுகைக் கடன்கள் படிப்படியாக குறைவடைந்தமை மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மூலமான அதிகரித்த வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் என்பன காரணங்களாயமைந்தன. எனினும், வெளிநாட்டுப் படுகடன் மீதான சராசரி வட்டி வீதம் முன்னைய ஆண்டின் 3.9 சதவீதத்திலிருந்து 2013இல் 3.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.


**அட்டவணை 6.3 செலவினத்தினுடைய பொருளாதாரப் பகுப்பாய்வும் மீள்கொடுப்பனவுகளை கழித்த கடன்வழங்கலும்**

| விடயம் | 2012 | 2013 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2013 தற்காலிக மானவை | 2014 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள |
|---|---|---|---|---|
| ரூ. மில்லியன் | | | | |
| **நடைமுறைச் செலவினம்** | **1,131,023** | **1,267,390** | **1,205,180** | **1,328,283** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 487,833 | 554,838 | 512,624 | 591,697 |
| இதில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் | 347,747 | 414,446 | 393,228 | 410,614 |
| வட்டிக் கொடுப்பனவுகள் (அ) | 408,498 | 444,800 | 444,007 | 441,035 |
| வெளிநாட்டு | 90,839 | 85,000 | 100,985 | 76,000 |
| உள்நாட்டு | 317,659 | 359,800 | 343,022 | 365,035 |
| நடைமுறை மாற்றல்களும் உதவிக் கொடுப்பனவுகளும் | 234,692 | 267,752 | 248,549 | 295,551 |
| இதில் குடும்ப அலகுகளுக்கும் ஏனைய துறைகளுக்கும் | 187,895 | 215,966 | 195,288 | 233,526 |
| சமுர்த்தி | 10,553 | 14,208 | 15,256 | 15,000 |
| ஓய்வூதியங்கள் | 111,682 | 129,100 | 122,813 | 136,210 |
| வளமாக்கி உதவிக் கொடுப்பனவு | 36,456 | 37,800 | 19,706 | 38,000 |
| ஏனையவை | 29,203 | 34,858 | 37,512 | 44,316 |
| **மூலதனச் செலவினம்** | **400,082** | **498,179** | **454,303** | **641,123** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 197,350 | 297,318 | 252,535 | 406,697 |
| மூலதன மாற்றல்கள் | 202,732 | 209,462 | 201,768 | 234,426 |
| குறைச் செலவினத்திற்கான ஏற்பாடு | - | -8,600 | - | - |
| **மீள் கொடுப்பனவுகளை கழித்த கடன் வழங்கல்** | **25,394** | **19,375** | **9,913** | **16,213** |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **1,556,498** | **1,784,944** | **1,669,396** | **1,985,619** |
| மொ.உ.உ. இன் சதவீதமாக | | | | |
| **நடைமுறை செலவினம்** | **14.9** | **14.6** | **13.9** | **13.4** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 6.4 | 6.4 | 5.9 | 6.0 |
| இதில் சம்பளங்களும் கூலிகளும் | 4.6 | 4.8 | 4.5 | 4.1 |
| வட்டிக் கொடுப்பனவுகள் (அ) | 5.4 | 5.1 | 5.1 | 4.4 |
| வெளிநாட்டு | 1.2 | 1.0 | 1.2 | 0.8 |
| உள்நாட்டு | 4.2 | 4.1 | 4.0 | 3.7 |
| நடைமுறை மாற்றல்களும் உதவிக் கொடுப்பனவுகளும் | 3.1 | 3.1 | 2.9 | 3.0 |
| இதில் குடும்ப அலகுகளும் ஏனைய துறைகளும் | 2.5 | 2.5 | 2.3 | 2.4 |
| சமுர்த்தி | 0.1 | 0.2 | 0.2 | 0.2 |
| ஓய்வூதியங்கள் | 1.5 | 1.5 | 1.4 | 1.4 |
| வளமாக்கி உதவிக்கொடுப்பனவு | 0.5 | 0.4 | 0.2 | 0.4 |
| ஏனையவை | 0.4 | 0.4 | 0.4 | 0.4 |
| **மூலதனச் செலவினம்** | **5.3** | **5.7** | **5.2** | **6.5** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 2.6 | 3.4 | 2.9 | 4.1 |
| மூலதன மாற்றல்கள் | 2.7 | 2.4 | 2.3 | 2.4 |
| குறைச் செலவினத்திற்கான ஏற்பாடு | - | -0.1 | - | - |
| **மீள் கொடுப்பனவுகளை கழித்த கடன் வழங்கல்** | **0.3** | **0.2** | **0.1** | **0.2** |
| **மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும்** | **20.5** | **20.5** | **19.2** | **20.0** |

(அ) 29.11.2013 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல. 230/2013 இற்கு ஏற்றவாறு நடைமுறையிலுள்ள பொது முதலீடு செயற்றிட்டங்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட ரூ. 18.9 பில்லியன் 2013இல் (தற்காலிகமானது) மூலதன மயப்படுத்தப்பட்டது.

மூலம் : நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

**வரைபடம் 6.4 தொழிற்பாடுகளின்படி மொத்தச் செலவினம் - 2013**




**அரச துறை ஊழியர்களுக்கான சிறப்புப் படிகள் மற்றும் வாழ்க்கைச் செலவுப்படி என்பனவற்றில் செய்யப்பட்ட அதிகரிப்பின் காரணமாக சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் அதிகரித்தது.** இதன்படி, 2013இல் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் ரூ.393.2 பில்லியனுக்கு 13.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அனைத்து அரச ஊழியர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தில் வழங்கப்பட்ட மேலதிக 5 சதவீத சிறப்புப் படிகள் மற்றும் மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியில் செய்யப்பட்ட அதிகரிப்பு என்பன 2013இல் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் செலவினத்தில் காணப்பட்ட பெயரளவு அதிகரிப்பிற்குப் பங்களித்தன. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, இது 2012இன் 4.6 சதவீதத்திலிருந்து 2013இல் 4.5 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. பாதுகாப்பு ஆளணியினர் உட்பட மத்திய அரச ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் கூலிகள் 2013இல் ரூ.288.2 பில்லியனுக்கு 11 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மாகாண சபை ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் கூலிகளுக்கான மத்திய அரசாங்கத்தின் பங்களிப்பு ரூ.105 பில்லியனுக்கு 19.1 சதவீதத்தினால் அதிகரித்தது. சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் இரண்டாவது பாரிய மீண்டெழும் செலவின விடயமாக விளங்கி 2013இன் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 32.6 சதவீதத்திற்கு வகைகூறியது.

**மீண்டெழும் செலவினத்தைச் சிக்கனப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்பு மிக்க முயற்சிகளின் காரணமாக ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.** இதன்படி, ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2012இன் 1.8 சதவீதத்திலிருந்து 2013இல் 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், பெயரளவு நியதிகளில் இது 2012இன் ரூ.140.1 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.119.4 பில்லியனுக்கு 14.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீது மத்திய அரசாங்கத்தினால் (பாதுகாப்பு உட்பட) உறப்பட்ட செலவினம் 2013இல் 15.3 சதவீதமான குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டிய வேளையில் இது இவ்வாண்டில் ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான மொத்தச் செலவில் 96.8 சதவீதத்திற்கு வகைகூறியது.

**அரச கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்கள், குடியிருப்பாளர்கள் மற்றும் ஏனைய துறைகளுக்கான மாற்றல்கள் உட்பட நடைமுறை மாற்றல்களும் உதவுதொகைகளும் உண்மை நியதிகளில் வீழ்ச்சியடைந்தன.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2013இல் இது முன்னைய ஆண்டின் 3.1 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், பெயரளவு நியதிகளில் நடைமுறை மாற்றல்களும் உதவுதொகைகளும் 2012இன் ரூ.234.7 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.248.5 பில்லியனுக்கு 5.9 சதவீதத்தினால் அதிகரித்தன. ஓய்வூதியம் பெறுவோர் உள்ளிட்ட குடியிருப்பாளர்கள் தொடர்ந்தும் மிகப் பெரும் நன்மைபெறுநர்களாக விளங்கி 2013இன் மொத்த நடைமுறை மாற்றல்களில் 78.6 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனைத் தொடர்ந்து அரச நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் விளங்கி மொத்தத்தில் முறையே 15.9 சதவீதத்திற்கும் 5.6 சதவீதத்திற்கும் வகைகூறின.

**குடியிருப்பாளர்களுக்கான நடைமுறை மாற்றல்கள் அதிகரித்தமைக்கு ஓய்வூதியங்கள் மற்றும் சமுர்த்திக் கொடுப்பனவுகள் மீதான அரச செலவிடல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** பெயரளவு நியதிகளில் இது, 2013இல் ரூ.195.3 பில்லியனுக்கு 3.9 சதவீதத்தினால் அதிகரித்தது. குடியிருப்பாளர்களுக்கான மாற்றல்களில் 62.9 சதவீதத்திற்கு வகைகூறிய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 2013இல் ரூ.122.8 பில்லியனுக்கு 10 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2013 சனவரியிலிருந்து ஓய்வூதியக்காரர்களுக்கான மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி ரூ.500 இனால் அதிகரிக்கப்பட்டமையும் ஓய்வூதிய முரண்பாடுகளை சீர்செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், 2012இல் மேலதிகமாக சேர்ந்து கொண்ட 13,184 புதிய ஓய்வூதியக்காரர்களின் முழுமையான தாக்கமும், 2013இல் மேலும், புதிதாகச் சேர்ந்த 22,112 ஓய்வூதியக்காரர்களின் பகுதியளவான தாக்கமும் காரணங்களாக அமைந்தன. வளமாக்கி உதவுதொகை 2012இன் ரூ.36.5 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.19.7 பில்லியனுக்கு 45.9

சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2013இன் முதலரைப் பகுதியில் இருப்புக்கள் கிடைக்கத்தக்கதாக இருந்தமையின் விளைவாக வளமாக்கி இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தமையும் அரச வளமாக்கிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட சாதகமான நீண்ட காலக் கொடுகடன் வசதிகளும் காரணங்களாக அமைந்தன. 2012ஆம் ஆண்டுப் பகுதியில் நிலவிய மோசமான வானிலை நிலைமை வளமாக்கிப் பாவனையைக் குறைத்து மிகையான இருப்பிற்கு வழியமைத்தது. உடல் ஊனமடைந்த போர்வீரர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான செலவினம் 2013இல் ரூ.16.2 பில்லியனுக்கு 9.3 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இன்னொரு ரூ.2.5 பில்லியன் "ரணவிரு மகிய றேகவர்ண" நிகழ்ச்சித்திட்டத்தின் மீது செலவிடப்பட்டது. 2013இல் வருமான துணைநிரப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான குடும்பங்களின் எண்ணிக்கை குறைவடைந்த போதும், சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான நலன்புரிச் செலவினம் 2013இல் ரூ.15.3 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு 2012 ஏப்பிறலில் சமுர்த்தி படியில் செய்யப்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக இருந்தது. ஏற்கனவே இருந்த சமுர்த்திப் படி ரூ.250, ரூ.615 இற்கும் அது ரூ.750 இற்கும் ரூ.900 படி ரூ.1,200 இற்கும் அதிகரிக்கப்பட்டது. மேலும், 70 வயதினைக் கடந்த வயது முதிர்ந்தவர்களுக்கு நிதியியல் ஆதரவினை வழங்குவதற்காக அரசாங்கம் ரூ.2.3 பில்லியனைப் பயன்படுத்தியது. அதேவேளை, இலவச பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்கள், சீருடைகள், பருவகாலச் சீட்டுக்கள், இலவச சமய பள்ளிக்கூட நூல்கள் மற்றும் பள்ளிக்கூட ஊட்டச்சத்து உணவு நிகழ்ச்சித்திட்டம் போன்ற பள்ளிக்கூடப் பிள்ளைகளை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள், 2013ஆம் ஆண்டுப் பகுதியில் அரசாங்கத்தின் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ஏனைய முக்கிய உதவுதொகைத் திட்டங்களிடையே காணப்பட்டன.

**இவ்வாண்டுப் பகுதியில் அரச நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் பெயரளவு நியதிகளில் அதிகரித்தமைக்கு கல்வித் துறைக்கான மாற்றல்களும் போக்குவரத்துத் துறையிலுள்ள நிறுவனங்களின் தொழிற்பாட்டு இழப்புக்களை உள்ளடக்குவதற்கான மாற்றல்களுமே முக்கிய காரணமாகும்.** 2013இல் அரச நிறுவனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் ரூ.39.4 பில்லியனுக்கு 12.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், அரச கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் ரூ.13.9 பில்லியனுக்கு 17.2 சதவீதத்தினால் அதிகரித்தன. அரச நிறுவனங்களுக்கான நடைமுறை மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, உயர் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கான மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். அதேவேளை, அரச கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இலங்கைப் புகைவண்டித் திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற்பாட்டு இழப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இலங்கைப் போக்குவரத்துச் சபை (ரூ.5.1 பில்லியன்), இலங்கைப் புகைவண்டித் திணைக்களம் (ரூ.5.2 பில்லியன்) மற்றும் அஞ்சல் திணைக்களம் (ரூ.2.9 பில்லியன்) என்பனவற்றின் தொழிற்பாட்டு இழப்பினை ஈடுசெய்வதற்கான மாற்றல்கள் 2013இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான மொத்த மாற்றல்களில் ஏறத்தாழ 98 சதவீதத்திற்கு வகைகூறின.

**இவ்வாண்டில் அரசிறைச் சேகரிப்பிலான மெதுவான வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் அதேபோன்று அரச முதலீடுகளும் உபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த செயற்றிட்டங்களுக்கே நெறிப்படுத்தப்பட்டன.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் முன்னைய ஆண்டின் 5.6 சதவீதத்திலிருந்து 2013இல் 5.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் அரச முதலீடுகள் மொ.உ.உற்பத்தியின் 5.5 சதவீதமாகக் காணப்பட்டன. எனினும், பெயரளவு நியதிகளில் மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2012இன் ரூ.425.5 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.464.2 பில்லியனுக்கு 9.1 சதவீதத்தினால் அதிகரித்தன. மூலதனச் செலவினம் மற்றும் இலங்கை மின் சபை மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை போன்ற வர்த்தகம் சார்ந்த அரச தொழில்முயற்சிகளுக்கு வழிப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதிகளைக் கொண்ட அரசின் கடன் வழங்கல் என்பனவற்றை உள்ளடக்கிய அரச முதலீடுகள் 2013இல் ரூ.481.2 பில்லியனுக்கு 8.4 சதவீதத்தினால் அதிகரித்த போதும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இது, முன்னைய ஆண்டின் 5.9 சதவீதத்திலிருந்து 2013இல் 5.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2013இல் அரச முதலீடுகள், 2013ஆம் ஆண்டிற்கான ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 6.1 சதவீதத்திலும் பார்க்கக் குறைவானதாக இருந்தது. மூலதனச் செலவினத்தின் கீழ், உண்மைச் சொத்துக்களின் (மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு மற்றும் பொருத்தப்பட்ட சொத்துக்களின் நிருமாணம் மற்றும் அபிவிருத்தி) கையேற்பின் மீது அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் ஏற்படுத்தப்பட்ட செலவினம் 2013இல் ரூ.252.5 பில்லியனுக்கு 28 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், 2013இல் மூலதன மாற்றல்கள் ரூ.201.8

பில்லியனுக்கு 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு மாகாண சபைகளுக்கான மூலதன மாற்றல்கள் 17.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கிடையிலும் அரச நிறுவனங்களுக்கான மாற்றல்கள் 1.7 சதவீதத்தினாலும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் 9.6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். அதேவேளை, கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் பகிர்ந்தளித்த தொகை 2012இன் ரூ.43.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ரூ.26.9 பில்லியனாகக் காணப்பட்டது.

**அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2013இல் பொருளாதார உட்கட்டமைப்பின் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தியது.** முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் தொடர்பில் கடந்த காலங்களில் காணப்பட்ட ஒன்றுசேர்ந்த உத்வேகம் 2013இலும் தொடர்ந்த வேளையில், பிராந்தியங்களிடையேயான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்காக பல பிராந்திய மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன. பொருளாதாரப் பணிகளிலான அரச முதலீடுகள் ரூ.369.4 பில்லியனாக அமைந்து, அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய கூறாக தொடர்ந்து விளங்கி 2013இன் மொத்த அரச முதலீட்டில் 76.8 சதவீதத்திற்கு வகைகூறியது. இதற்கமைய, வீதிகள், துறைமுகங்கள், வலு மற்றும் சக்தி, போக்குவரத்து, நீர்வழங்கல் மற்றும் நீர்ப்பாசனத் துறைகளில் குறிப்பிடத்தக்க முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. பிராந்திய அபிவிருத்திகளுக்கு ஆதரவளிப்பதற்காகவும் நகர-கிராமிய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்காகவும் அரசாங்கம் விரைவுப்பாதை மற்றும் நெடுஞ்சாலை அபிவிருத்திக்கு முன்னுரிமையளித்தது. இதற்கமைய கொழும்பு - கட்டுநாயக்கா விரைவுப்பாதை 2013இல் நிறைவடைந்ததுடன் கொழும்பு வெளிச்சுற்று நெடுஞ்சாலைச் செயற்றிட்டம் மற்றும் தென்பகுதி விரைவுப்பாதை விரிவாக்கச் செயற்றிட்டம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 2014 மார்ச்சில் திறந்துவிடப்பட்டது. நாடு முழுவதும் புகைவண்டிப் பாதையை விரிவாக்குவதன் மூலமும் புனரமைப்பதன் மூலமும் பொதுமக்களுக்கான போக்குவரத்தினை மேம்படுத்துகின்ற அரசாங்கத்தின் உபாயத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் புகைவண்டிப் போக்குவரத்துப் பணிகளை மேம்படுத்துவதற்காகவும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இப்பிராந்தியத்தில் இலங்கையை கடற்போக்குவரத்து மையமாக நிலைப்படுத்தும் அரசாங்கத்தின் தொலைநோக்கத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் மகம் றுகுணுபுர மகிந்த ராஜபக்ஷ துறைமுகம் மற்றும் கொழும்பு துறைமுகங்களின் கட்டுமானத்திற்காகவும் விரிவாக்கத்திற்காகவும் குறிப்பிடத்தக்க முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, 2013ஆம் ஆண்டுப் பகுதியில் வலு மற்றும் சக்தித் துறையிலும் அதேபோன்று நீர்வழங்கல் மற்றும் நீர்ப்பாசனத் துறைகளிலும் செய்யப்பட்ட முதலீடுகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்கின.

**சமூகப் பணிகளிலான அரச முதலீடுகள் கல்வி மற்றும் நலத் துறைகளின் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தின.** சமூகப் பணிகளிலான அரச முதலீடுகள் 2013இல் ரூ.77.6 பில்லியனாக விளங்கி கல்வி மீதான ரூ.31.9 பில்லியனையும் நலத் துறை மீதான ரூ.19.9 பில்லியனையும் உள்ளடக்கியிருந்தன. முதலாந்தர மற்றும் இரண்டாந்தரப்

**அட்டவணை 6.4 செலவினத்தின் தொழிற்பாட்டுப் பகுப்பாய்வு**

| விடயம் | 2012 | 2013 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2013 தற்காலிக மானவை | 2014 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள |
|---|---|---|---|---|
| | ரூ. மில்லியன் | | | |
| நடைமுறைச் செலவினம் | **1,131,023** | **1,267,390** | **1,205,180** | **1,328,283** |
| அரச பொதுப் பணிகள் | 254,371 | 303,263 | 270,554 | 313,946 |
| பொது நிருவாகம் | 47,135 | 55,414 | 54,303 | 73,036 |
| பாதுகாப்பு | 163,219 | 198,997 | 170,150 | 183,027 |
| பொதுமக்கள் ஒழுங்கு, பாதுகாப்பு | 44,017 | 48,852 | 46,101 | 57,883 |
| சமூகப் பணிகள் | 335,427 | 408,387 | 399,666 | 445,973 |
| கல்வி | 107,271 | 121,189 | 119,819 | 127,004 |
| நலம் | 81,946 | 95,016 | 99,609 | 120,612 |
| நலன்புரி | 128,451 | 166,724 | 159,787 | 173,942 |
| சமூகப் பணிகள் | 17,758 | 25,458 | 20,451 | 24,414 |
| பொருளாதாரப் பணிகள் | 92,034 | 102,209 | 82,146 | 115,304 |
| வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் | 46,429 | 55,023 | 29,899 | 58,769 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 3,612 | 3,751 | 4,001 | 409 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 34,995 | 35,027 | 36,810 | 40,153 |
| ஏனையவை | 6,998 | 8,408 | 11,435 | 15,973 |
| ஏனையவை | 449,191 | 453,531 | 452,814 | 453,060 |
| இதில் வட்டிக் கொடுப்பனவுகள் | 408,498 | 444,800 | 444,007 | 441,035 |
| மூலதனச் செலவினம் மற்றும் கடன்வழங்கல் | **443,973** | **529,250** | **481,203** | **668,465** |
| அரச பொதுப் பணிகள் | 27,510 | 37,716 | 32,804 | 74,386 |
| பொது நிருவாகம் | 26,565 | 35,603 | 31,631 | 67,701 |
| பொதுமக்கள் ஒழுங்கு, பாதுகாப்பு | 945 | 2,113 | 1,173 | 6,685 |
| சமூகப் பணிகள் | 71,176 | 95,228 | 77,643 | 121,335 |
| கல்வி | 28,930 | 42,461 | 31,982 | 44,870 |
| நலம் | 17,155 | 23,363 | 19,920 | 41,523 |
| வீடமைப்பு | 7,823 | 7,383 | 8,014 | 9,487 |
| சமூகப் பணிகள் | 17,267 | 22,021 | 17,727 | 25,455 |
| பொருளாதாரப் பணிகள் | 343,828 | 403,985 | 369,377 | 472,223 |
| வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் | 30,351 | 55,997 | 36,721 | 80,532 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 85,589 | 75,142 | 87,517 | 58,967 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 204,539 | 225,282 | 210,398 | 259,587 |
| ஏனையவை | 23,350 | 47,564 | 34,741 | 73,137 |
| ஏனையவை | 1,459 | 921 | 1,379 | 521 |
| குறைச் செலவினம் | - | -8,600 | - | - |
| மொத்தச் செலவினமும் கடன் வழங்கலும் | **1,574,995** | **1,796,640** | **1,686,384** | **1,996,748** |
| | மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக | | | |
| அரச பொதுப்பணிகள் | 3.7 | 3.9 | 3.5 | 3.9 |
| சமூகப் பணிகள் | 5.4 | 5.8 | 5.5 | 5.7 |
| பொருளாதாரப் பணிகள் | 5.8 | 5.8 | 5.2 | 5.9 |
| ஏனையவை | 5.9 | 5.2 | 5.2 | 4.6 |
| இதில் வட்டிக் கொடுப்பனவுகள் (அ) | 5.4 | 5.1 | 5.1 | 4.4 |
| மொத்தச் செலவினமும் கடன் வழங்கலும் | **20.8** | **20.7** | **19.4** | **20.1** |

(அ) 29.11.2013 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல. 230/2013 இற்கு ஏற்றவாறு நடைமுறையிலுள்ள பொது முதலீடு செயற்றிட்டங்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட ரூ. 18.9 பில்லியன் 2013இல் (தற்காலிகமானது) மூலதன மயப்படுத்தப்பட்டது.

மூலம் : நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

பள்ளிக்கூடங்களிலுள்ள மூலதனச் சொத்துக்களை மேம்படுத்துதல், அறிவினை உயர்த்துதல் மற்றும் நிறுவன ரீதியான அபிவிருத்தி, பல்கலைக்கழக உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல், தொழில் பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வியை முன்னேற்றுதல் என்பன கல்வியிலான மூலதன செலவிடல்களுக்கான முக்கிய துறைகளாகக் காணப்பட்டன.

**2013இல் பொது முதலீடு நிகழ்ச்சித்திட்டம் பொருளாதார உட்கட்டமைப்பு மீது கவனம் செலுத்தியது.** அண்மை ஆண்டுகளில் முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பான அதிகரித்துவந்த இயங்குதிசை 2013 இலும் தொடர்ந்த வேளையில், பல பிரதேச மற்றும் கிராமிய உட்கட்டமைப்ப செயற்றிட்டங்கள் பிரதேசங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்காக நடைமுறைபடுத்தப்பட்டது. பொருளாதார சேவைகளில் ரூ. 369.4 பில்லியன் அரச முதலீடென்பது அரச முதலீடு நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய அங்கமாக விளங்கி 2013 இல் மொத்த அரச முதலீட்டின் 76.8 சதவீதமாக வகைகூறியது. இதற்கேற்ப, வீதிகள், துறைமுகங்கள், வலு மற்றும் சக்தி, போக்குவரத்து, மற்றும் நீர் வழங்கள் மற்றும் நீர்பாசனத் துறைகளில் கணிசமான முதலீடுகள் செய்யப்பட்டன. பிரதேச அபிவிருத்திக்கு ஆதரவாகவும் நகர-கிராமிய ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்காகவும் கடுகதிப்பாதை மற்றும் நெடுஞ்சாலை வரையமைப்புகளின் அபிவிருத்திக்கு அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கியது. இதற்கேற்ப, 2012இல் கொழும்பு-கட்டுநாயக்கா கடுகதிப்பாதை 2013 இல் பூர்த்திசெய்யப்பட்டதுடன் கொழும்பு வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் கட்டம் மற்றும் தென் கடுகதிப்பாதையின் நீட்டிப்பு செயற்றிட்டம் 2014 மார்ச்சில் பொது மக்களுக்காக திறந்து வைக்கப்பட்டது. நாடு முழுவதிலும் புகைவண்டிப் பாதைகளை நீட்டி மற்றும் புணரமைப்பு செய்து திரளான போக்குவதர்து நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான அரசின் உபாயத்திற்கேற்ப புகைவண்டிப் போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவதற்கும் முதலீடுகள் செய்யப்பட்டது. மேலும், பிரதேசத்தில் ஓர் கடலாண்மை மையமாக இலங்கையை நிலைப்படுத்தும் அரசின் நோக்கித்திற்கு வசதியளிக்கம் வகையில் மகம் ருகுணுபுர மகிந்த ராஜபக்ஸ துறைமுகம் மற்றும் கொழும்பு துறைமுகத்தின் கட்டுமானம் மற்றும் விரிவாக்கத்தின் மீது கணிசமான முதலீடுகள் செய்யப்பட்டன.

**சமூக சேவைகளிலான அரச முதலீடு முக்கியமாக கல்வி மற்றும் நலத்துறைகள் மீதிருந்தது.** 2013 இல் சமூகச் சேவைகளிலான அரச முதலீடு ரூ. 77.6 பில்லியனாகஈ கல்வி மீது ரூ. 32 பில்லியன் மற்றும் நலத்துறை மீது ரூ. 19.9 பில்லியனை உள்ளடக்கியது. முதன்மை மற்றும் இரண்டாந்தர பள்ளிக்கூடங்களில் மூலதனச் சொத்துக்களின் மேம்படுத்தல், அறிவு மேம்படுத்தல் மற்றம் நிறுவனரீதியான அபிவிருத்தி, பல்கலைக்கழக உட்கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றம் தொழில்சார் மற்றம் தொழில்நுட்ப கல்வியின் மேம்பபடுத்தல் ஆகியவை கல்வி மூலதனச் செலவிற்கான முக்கிய விடயங்காகும். இவ்வகையில், நலத்துறையில் அரச முதலீடென்பது மருத்துவமனைகளின் கட்டுமானம் மற்றும் மேம்படுத்தல், ஆய்வுகூட ஆய்கருவிகள் மற்றம் உயிரியால்-மருத்துவப் பொறிகளின் வழங்கல் மீது முக்கியமாக செலுத்தப்பட்டது.

**கிராம - நகர ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்குடன் அரசாங்கம் பல பிராந்திய மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்தியது.** சுயமாகத் தங்கியிருக்கும் குடியிருப்பாளர் பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்வதனை இலக்காகக் கொண்ட “திவிநெகும” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செலவினம் 2013இல் ரூ.1.5 பில்லியனாகக் காணப்பட்டது. மேலும், ரூ.30.7 பில்லியன் கொண்ட தொகை “கமநெகும” நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் உட்கட்டமைப்பு மேம்பாட்டுச் செயற்றிட்டங்கள் உள்ளிட்ட சமூக அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட செலவினமாகக் காணப்பட்டது. மேலும் ஒவ்வொரு பிரதேசத்தினையும் தனித்துவமான பிரதேசமாக அடையாளம் காணும் விதத்தில் அவற்றின் பல்லினப்படுத்தப்பட்ட மூலவளங்கள், சாத்தியமான அபிவிருத்தித் திட்டங்கள், பிரதேசங்களுக்கே உரித்தான அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் என்பன ஒவ்வொரு மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட்டன.

## முக்கிய இறை நிலுவைகள்

**இறைத் திரட்சியை நோக்கிய அரசின் தொடர்ச்சியான கடப்பாடுகளை பிரதிபலிக்கின்ற விதத்தில் 2013இல் திரண்ட இறைப் பற்றாக்குறை, 2012இன் மொ.உ.உற்பத்தியின் 6.5 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 5.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** அரசிறைச் சேகரிப்பு எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவாக இருந்த போதும், செலவினம் சிக்கனப்படுத்தப்பட்டமையானது திரண்ட இறைப் பற்றாக்குறையினை வரவு செலவுத்திட்ட இலக்கிடலுக்கு அணித்தானதொரு மட்டத்தில் பேணுவதனை இயலச் செய்ததுடன் அரசாங்கத்தின் மூலவள இடைவெளியை ஒடுக்கி

அரசாங்கத்தின் நிதித் தேவைப்பாடுகளை குறைவடையச் செய்தது. அரசாங்கத்தின் குறைச் சேமிப்புக்களைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 1 சதவீதத்திலிருந்து 2013இன் மொ.உ.உற்பத்தியில் 0.8 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. எனினும், இது 2013 இற்கான ஆரம்ப வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் இலக்கிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 0.1 சதவீதத்தினைவிட குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாக விளங்கி அரசிறைச் சேகரிப்பில் காணப்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. அதேவேளை, திரண்ட பற்றாக்குறையிலிருந்து வட்டிக் கொடுப்பனவை நீக்கிய ஆரம்பப் பற்றாக்குறை அரசாங்கத்தின் தற்றுணிபான இறைக் கொள்கையினைப் பிரதிபலித்து முறையே ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 1.1 சதவீதத்திலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதத்திற்கு மேம்பட்ட போதும் இது 2013ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட இலக்கான மொ.உ.உற்பத்தியின் 0.7 சதவீதத்திலும் பார்க்க சிறிதளவு உயர்வானதாக இருந்தது.

## வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடல்

**2013இல் இறைப் பற்றாகுறையினை நிதியிடுவதற்கு உள்நாட்டு மூலங்களில் பெருமளவிற்கு தங்கியிருந்த வேளையில் வெளிநாட்டு மூலங்களிலிருந்தான கடன்பாடுகள் குறைக்கப்பட்டன.** இதன்படி, 2013இன் ரூ.516.1 பில்லியன் கொண்ட மொத்த நிதியிடல் தேவைப்பாட்டில் உள்நாட்டு நிதியிடல் 2012இன் 41 சதவீதத்துடனும் 2013 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் இலக்கிடப்பட்ட 71 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 76 சதவீதத்திற்கு பங்களித்த வேளையில் மீதி வெளிநாட்டு மூலங்களினூடாக நிதியிடப்பட்டது. இதன் விளைவாக 2013இல் தேறிய உள்நாட்டு நிதியிடல் ஆரம்ப மதிப்பீடான ரூ.359.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.392.4 பில்லியனாக விளங்கிய வேளையில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூ.123.7 பில்லியனாக விளங்கியதுடன் இது ஆரம்ப மதிப்பீடான ரூ.148 பில்லியனைவிடக் குறைவானதாகவும் காணப்பட்டது.


**பற்றாக்குறையினை நிதியிடுவதில் அரசாங்கம் வங்கித்தொழில் துறையிலிருந்தான கடன்பாடுகளில் பாரியளவிற்கு தங்கியிருந்த வேளையில் வங்கியல்லா துறையிலிருந்தான கடன்பாடுகள் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவாக இருந்தன.** இதன் விளைவாக 2013இல் வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய கடன்பாடுகள் ரூ.297 பில்லியனாக விளங்கி இவ்வாண்டிற்காக இலக்கிடப்பட்ட ஆரம்ப மதிப்பீடான ரூ.70 பில்லியனை விஞ்சிக் காணப்பட்டதுடன் 2012இன் வங்கித்தொழில் துறையிலிருந்தான கடன்பாடான ரூ.131.5 பில்லியனை விட உயர்வானதாகக் காணப்பட்டது. மத்திய வங்கிக்கு ரூ.164.8 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுகள் காணப்பட்ட போதும் வர்த்தக வங்கிகளிலிருந்தான ரூ.461.8 பில்லியன் கொண்ட அதிகரித்த கடன்பாடுகள் இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தன. உள்நாட்டுச் சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்ளுமொரு வழிமுறையாக மத்திய வங்கி வசமிருந்த ரூ.163 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் உரிய காலத்திற்கு முன்பே இளைப்பாற விடப்பட்டமை, ரூ.2.1 பில்லியனால் குறைவடைந்த மத்திய வங்கியிலிருந்தான தற்காலிக முற்பணங்களுடன் சேர்ந்து 2013இல் மத்திய வங்கிக்கான தேறிய மீள்கொடுப்பனவிற்குப் பங்களித்தது. எனினும், வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவுகள், இவ்வாண்டுப் பகுதியில் வங்கித்தொழில் துறையினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் அதிகரிக்க வழிவகுத்தன. வர்த்தக வங்கிகளிலிருந்தான கடன்பாடுகள் 2013ஆம் ஆண்டுப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்வானதாக இருந்த போதும் உள்நாட்டுப் பணச் சந்தையில் உயர்ந்த மிகையான திரவத்தன்மை நிலவியமையின் காரணமாக அரச பிணையங்களின் வட்டி வீதங்கள் பரந்தளவிற்கு உறுதியாக் காணப்பட்டன. அதேவேளை, 2013இல் வங்கியல்லாத் துறையிலிருந்தான சந்தையல்லா கடன்பாடுகள் உள்ளடங்களாக கடன்பாடுகள் ரூ.95.4 பில்லியனாக விளங்கியதுடன் இது 2013 வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ரூ.289.4 பில்லியனை விட குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவாகக் காணப்பட்டது. இதன் விளைவாக, மொத்த உள்நாட்டுக் கடன்பாடுகளில் வங்கியல்லாத கடன்பாடுகளின் பங்கு 2012இன் 35 சதவீதத்திலிருந்து 2013இல் 24 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**2013இல் வரவு செலவுத்திட்டத்தினை நிதியிடுவதற்கு அரசாங்கம் நீண்ட காலச் சந்தைப்படுத்தத்தக்க படுகடன் சாதனங்களின் மீது அதிகரித்த அளவிற்கு தங்கியிருந்தது.** இதற்கமைய, திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பவற்றை உள்ளடக்கிய நீண்ட காலச் சந்தைப்படுத்தத்தக்க சாதனங்கள் மூலமான தேறிய கடன்பாடுகள் ரூ.392.4 பில்லியனாக விளங்கிய வேளையில் நீண்டகால ஆனால் சந்தைப்படுத்த முடியாத சாதனங்களின் ரூபாக் கடன்கள் ரூ.2.9 பில்லியன் கொண்ட தேறிய


6

இறைக் கொள்கையும் அரச நிதியும்

வரைபடம் 6.5 பற்றாக்குறை நிதியிடல் (மொ.உ.உ.இன் சதவீதமாக)




வரைபடம் 6.6 வங்கி நிதியிடலின் மூலங்கள்




மீள்கொடுப்பனவினைப் பதிவு செய்தன. அதேவேளை சாதனமற்றவற்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கடன்பாடுகள் 2013ஆம் ஆண்டுப் பகுதியில் ரூ.50.7 பில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவினைப் பதிவு செய்தன. இரு அரச வங்கிகளிலும் பெறப்பட்ட மேலதிகப் பற்றுக்கள் மற்றும் தற்காலிக முற்பணங்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் செய்யப்பட்ட மீள்கொடுப்பனவுகள் சாதனமல்லாக் கடன்பாடுகளில் ஏற்பட்ட குறைவிற்கு பகுதியளவில் பங்களித்தன.

**வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுக் கடன்பாடுகள் 2013இல் அதிகரித்து சாதகமான முதலீட்டாளர் மனோபாவத்தினைப் பிரதிபலித்தன.** 3 தொடக்கம் 5 ஆண்டுகள் வரையிலான முதிர்ச்சியைக் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்தான மொத்தக் கடன்பாடுகள் ரூ.238 பில்லியனாக (ஐ.அ.டொலர் 1,820 மில்லியன்) விளங்கிய வேளையில்

அட்டவணை 6.5 உள்நாட்டு நிதியிடல் மூலங்கள்

ரூபா பில்லியன்

| விடயம் | 2010 | 2011 | 2012 | 2013 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| **கருவிகளின் படி** | **202.2** | **231.2** | **200.4** | **392.4** |
| திறைசேரி முறிகள் (அ) | 140.4 | 168.4 | 154.5 | 252.1 |
| திறைசேரி உண்டியல்கள் (ஆ) | 82.8 | 79.6 | 16.8 | 53.5 |
| ரூபாக் கடன்கள் | -24.6 | -25.7 | -3.6 | -2.9 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 11.1 | 5.3 | 18.4 | 140.3 |
| மத்திய வங்கி தற்காலிக முற்பணங்கள் | 4.0 | 16.9 | 16.5 | -2.1 |
| ஏனையவை | -11.5 | -13.2 | -2.2 | -48.5 |
| **மூலங்களின் படி** | **202.2** | **231.2** | **200.4** | **392.4** |
| வங்கி | -1.9 | 191.9 | 131.5 | 297.0 |
| வங்கியல்லா | 204.1 | 39.4 | 68.9 | 95.4 |

(அ) வெளிநாட்டு முதலீட்டாளர்கள், புலம்பெயர்ந்த இலங்கையர், புலம்பெயர்ந்த வேலையாட்கள் மற்றும் 2012இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் நீங்கலாக.

(ஆ) வெளிநாட்டு முதலீட்டாளர்கள், புலம்பெயர்ந்த இலங்கையர் மற்றும் புலம்பெயர்ந்த வேலையாட்களுக்கு வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் நீங்கலாக.

மூலங்கள் : நிதி மற்றும திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

மீள்கொடுப்பனவுகள் ரூ.97.7 பில்லியனாக (ஐ.அ.டொலர் 750 மில்லியன்) விளங்கின. அதேவேளை, 2013ஆம் ஆண்டுப் பகுதியில் செயற்றிட்ட நிதியிடல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இணைக்கிணை நிதியமாக வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து அரசாங்கம் ரூ.2.8 பில்லியனைக் கடன்பட்டது.

**2013ஆம் ஆண்டிற்காக மூலவள இடைவெளியினை நிரப்புவதில் வெளிநாட்டு மூலவளங்கள் 2013ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைந்தளவு நிதியிடலுக்கே பங்களித்தமைக்கு வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன் பகிர்ந்தளிப்புக்கள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும்.** வெளிநாட்டு மூலங்களிலிருந்தான மொத்தக் கடன்பாடுகள் வரவு செலவுத்திட்ட மதிப்பீடான ரூ.291 பில்லியனுக்கெதிராக 2013இல் ரூ.235.1 பில்லியனாக விளங்கிய வேளையில் இக்காலப்பகுதியில் தேறிய நிதியிடல் ரூ.123.7 பில்லியனாகக் காணப்பட்டது. இதன்படி, மொத்த நிதியிடலில் வெளிநாட்டு நிதியிடலின் பங்கு 2012இன் 59 சதவீதத்திலிருந்து 2013இல் 24 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இருபுடை மற்றும் பல்புடை மூலங்களிலிருந்தான செயற்றிட்டக் கடன்கள், முன்னைய ஆண்டின் ரூ.233.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ரூ.164.2 பில்லியனாக விளங்கியது. 2013இல் ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, யப்பான் அரசாங்கம் மற்றும் சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கி என்பன வெளிநாட்டு நிதியிடலின் முக்கிய கடனளிப்பவர்களாக இருந்தன. அதேவேளை, ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட தேறிய வெளிநாட்டு முதலீடுகள் ரூ.62.5 பில்லியனாகக் காணப்பட்ட வேளையில் 2013இல் திறைசேரி உண்டியல்களில் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் ரூ.6.7 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. 2013இல் அரச பிணையங்களிலான

வெளிநாட்டு முதலீடுகள் 2012இல் பெறப்பட்ட ரூ.105.7 பில்லியனிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவாக இருந்தமைக்கு அரச பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகளுக்கான உச்ச எல்லை அடையப்பட்டமையே காரணமாகும்.

## 6.4 அரச படுகடனும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும்

### அரச படுகடன்

**2013இல் மொ.உ.உற்பத்திக்கான அரச படுகடன் விகிதம் 2012இல் பதிவு செய்யப்பட்ட 79.2 சதவீதத்திலிருந்து 78.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து கடந்த அண்மைக் காலங்களில் அவதானிக்கப்பட்ட குறைந்து செல்லும் போக்கினைத் தொடர்ந்தது.** தொடர்ச்சியான இறைத்திரட்சி முயற்சிகள் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்து படுகடன் சுமைக் குறைப்பிற்குப் பங்களித்தது. எனினும், முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமைக்கும் கழிவிடல் காரணியில் (இது திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வழங்கல் மற்றும் முதிர்ச்சிகளின் ஏட்டுப் பெறுமதிக்கும் முகப்புப் பெறுமதிக்குமிடையிலான தேறிய வேறுபாடாகும்) ஏற்பட்ட அதிகரிப்பிற்கும் நீண்ட கால அரச பிணையங்களின் அதிகரித்த வழங்கல் முக்கிய காரணமாக விளங்கியதுடன் இது வெளிநின்ற படுகடன் இருப்பின் மீது எதிர்க்கணியமான தாக்கத்தினையும் கொண்டிருந்தது. உள்நாட்டுப் படுகடன் 2012இன் மொ.உ.உற்பத்தியின் 42.7 சதவீதத்திலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியின் 44.2 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் வெளிநாட்டுப் படுகடன் முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 36.5 சதவீதத்திலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியின் 34.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பெயரளவு நியதிகளில், மொத்த வெளிநின்ற அரச படுகடன் 2013 இறுதியில் ரூ.6,793.2 பில்லியனுக்கு 13.2 சதவீதத்தினால் அதிகரித்தது.

**அட்டவணை 6.6 வெளிநின்ற அரச படுகடன் (ஆண்டு முடிவில் உள்ளவாறு)**

ரூ.மில்லியன்

| விடயம் | 2010 | 2011 | 2012 | 2013 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| **மொத்த அரச படுகடன்** | **4,590,245** | **5,133,365** | **6,000,112** | **6,793,249** |
| **உள்நாட்டு படுகடன் (அ)** | **2,565,662** | **2,804,085** | **3,232,813** | **3,832,825** |
| முதிர்வுகாலத்தின்படி | | | | |
| குறுங்கால | 619,549 | 698,190 | 813,272 | 909,156 |
| நடுத்தர மற்றும் நீண்டகால | 1,946,113 | 2,105,895 | 2,419,541 | 2,923,670 |
| நிறுவனங்களின்படி | | | | |
| வங்கிகள் (ஆ) | 691,716 | 886,221 | 1,060,317 | 1,433,773 |
| வங்கியல்லா | 1,873,845 | 1,917,864 | 2,172,495 | 2,399,053 |
| **வெளிநாட்டு படுகடன்** | **2,024,583** | **2,329,280** | **2,767,299** | **2,960,424** |
| வகைகளின்படி | | | | |
| சலுகைக் கடன்கள் | 1,266,910 | 1,328,797 | 1,369,568 | 1,492,842 |
| சலுகையற்ற கடன்கள் | 147,241 | 235,923 | 455,069 | 460,475 |
| வர்த்தக | 610,433 | 764,560 | 942,662 | 1,007,107 |
| நாணயத்தின்படி | | | | |
| சி.எ.உ | 572,354 | 601,691 | 682,065 | 711,935 |
| ஐ.அ.டொலர் | 476,490 | 678,983 | 853,832 | 1,009,937 |
| யப்பானிய யென் | 508,802 | 560,456 | 575,196 | 485,325 |
| யூரோ | 142,371 | 146,711 | 174,563 | 185,606 |
| ஏனையவை | 324,566 | 341,439 | 481,643 | 567,621 |
| குறிப்பு : செலாவணிவீத வேறுபாடுகள் | -4,653 | 85,573 | 207,389 | -25,498 |

(அ) 2003 நவம்பரில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்கப்பட்ட ரூ.4,397 மில்லியன் கொண்ட அரசாங்க முறிகள், 2012 சனவரியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்ட ரூ. 78,447 மில்லியன், 2007இல் இருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் 2009இல் இருந்து வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டில் தொழில்புரிவோர் என்பவர்களின் வசமுள்ள ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் நீங்கலாக.


(ஆ) கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் வெளிநின்ற மீதிகளை உள்ளடக்குகின்றது.

மூலங்கள் : நிதி மற்றும திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**மொத்த அரச படுகடனில் உள்நாட்டுப் படுகடனின் பங்கு 2012இன் 53.9 சதவீதத்திலிருந்து 2013இல் 56.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.** இதற்கு, 2013ஆம் ஆண்டுப் பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகள் (65.6 சதவீதத்தினால்) மற்றும் திறைசேரி முறிகள் (17.1 சதவீதத்தினால்) என்பனவற்றின் வெளிநின்ற இருப்புக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இதன்படி, மொத்த உள்நாட்டுப் படுகடன் இருப்பில் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலப் படுகடனின் பங்கு முன்னைய ஆண்டின் 74.8 சதவீதத்திலிருந்து 2013இல் 76.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையான படுகடனின் முக்கியமான பங்கு திறைசேரி முறிகளையும் (83.9 சதவீதம்) இலங்கை அபிவிருத்தி முறிகளையும் (12.6 சதவீதம்) உள்ளடக்கியிருந்த வேளையில் ரூபாக் கடன்கள் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையான படுகடனில் 1.9 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, திறைசேரி உண்டியல்களும் மத்திய வங்கியிலிருந்தான தற்காலிக முற்பணங்களும் குறுங்காலப் படுகடன் இருப்பில் முறையே 77 சதவீதத்திற்கும் 12 சதவீதத்திற்கும் வகைகூறின. உள்நாட்டுப் படுகடன் இருப்பின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் முன்னைய ஆண்டின் 3.2 ஆண்டுகளிலிருந்து 2013இல் 4.8 ஆண்டுகளுக்கு அதிகரித்து, குறிப்பாக வரலாற்றில் முதற்றடவையாக 30 ஆண்டு கால திறைசேரி முறிகளின் வழங்கலுடன் கூடிய பொதுப்படுடனின் முன்மதியுடைய முகாமைத்துவத்தினைப் பிரதிபலித்தது.


**வங்கியல்லா துறை வசமிருந்த உள்நாட்டுப் படுகடனின் பங்கு 2012 இறுதியின் 67.2 சதவீதத்திலிருந்து 2013இல் 62.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதும் கூட பெயரளவு நியதிகளில் வங்கியல்லாத் துறையின் வசமிருந்த உள்நாட்டுப் படுகடன் ரூ.2,399.1 பில்லியனுக்கு 10.4 சதவீதம் கொண்ட**

வரைபடம் 6.7 வெளிநின்ற அரச படுகடன்





அதிகரிப்பினைப் பதிவு செய்தது. வங்கியல்லாத் துறை வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் ரூ.253.1 பில்லியனுக்கு 0.9 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்ததுடன் மொத்த வங்கியல்லாத் துறை படுகடன் இருப்பில் திறைசேரி உண்டியல்களின் தொடர்பான பங்கு முன்னைய ஆண்டின் 11.8 சதவீதத்திலிருந்து 2013இல் 10.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், திறைசேரி முறிகளுடான கடன்பாடுகள் ரூ.2,066 பில்லியனுக்கு 11.7 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் தொடர்பான பங்கு முன்னைய ஆண்டின் 85.2 சதவீதத்திலிருந்து 2013இல் 86.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. குறைந்த வட்டி வீதச் சூழலுக்கிடையிலும் நீண்ட கால முதலீட்டிற்காக அதிகரித்த முதலீட்டாளரின் முன்னுரிமை இப்பெயர்ச்சிக்குப் பங்களித்தது. ஊழியர் சேம நிதியமும் தேசிய சேமிப்பு வங்கியும் வங்கியல்லாத் துறையிலுள்ள அரச படுகடனின் முக்கிய உடமையாளர்களாக தொடர்ந்தும் விளங்கி வங்கியல்லாத் துறையின் படுகடன் இருப்பில் முறையே 58 சதவீதத்திற்கும் 15 சதவீதத்திற்கும் வகைகூறின.

வரைபடம் 6.8 வெளிநின்ற உள்நாட்டு படுகடனின் உள்ளடக்கம் - 2013





வங்கித்தொழில் துறை வசமிருந்த அரச படுகடன் 2013இல் ரூ.1,433.8 பில்லியனுக்கு 35.2 சதவீதத்தினால் அதிகரித்து, அரசின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு வங்கித்தொழில் துறையிலிருந்தான மூலவளங்களில் பெருமளவிற்கு தங்கியிருப்பதனைப் பிரதிபலித்தது. இதன்படி, மொத்த உள்நாட்டுப் படுகடனில் வங்கித்தொழில் துறையின் பங்கு 2012இன் 32.8 சதவீதத்திலிருந்து 2013இல் 37.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் உரிய காலத்திற்கு முன்னர் இளைப்பாறவிடப்பட்டமை மற்றும் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்களில் ஏற்பட்ட குறைப்பு என்பனவற்றின் காரணமாக மத்திய வங்கி வசமிருந்த வெளிநின்ற படுகடன் 2012இன் ரூ.265.2 பில்லியனிலிருந்து 2013 இறுதியில் ரூ.112.4 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன்படி, வங்கித்தொழில் துறையினால் வைத்திருக்கப்பட்ட மொத்த உள்நாட்டுப் படுகடனின் சதவீதமாக அரச படுகடனில் மத்திய வங்கியின் சொத்துடமை முன்னைய ஆண்டின் 25 சதவீதத்திலிருந்து 2013இல் 7.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மத்திய வங்கி வசமிருந்த படுகடனில் பெரும் பங்கு தற்காலிக முற்பணங்களை (97.1 சதவீதம்) உள்ளடக்கியிருந்த வேளையில் மீதிக்கு திறைசேரி உண்டியல்கள் வகைகூறின. திறைசேரி உண்டியல் உடமைகள் (102 சதவீதத்தினால்), இலங்கை அபிவிருத்தி முறிகள் (65.6 சதவீதத்தினால்) மற்றும் திறைசேரி முறிகள் (57.9 சதவீதத்தினால்) என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்பட்ட வெளிநின்ற அரச படுகடன் 2013 இறுதியில் ரூ.1,321.4 பில்லியனுக்கு 66.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

வரைபடம் 6.9 வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் உள்ளடக்கம் - 2013



வரைபடம் 6.10 மொத்த வெளிநின்ற படுகடனின் நாணய உள்ளடக்கம் - 2013




**வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் 2012 இறுதியின் ரூ.242.1 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 1,903.6 மில்லியன்) 2013 இறுதியில் ரூ.388.8 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 2,973.8 மில்லியன்) அதிகரித்தது.** 2013ஆம் ஆண்டுப் பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் தேறிய அடிப்படையிலான ரூ.140.3 பில்லியன் வழங்கல், ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையுடன் சேர்ந்து இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தது. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன், இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்தான ரூ.369.2 பில்லியன் (ஐ.அ.டொலர் 2,823.8 மில்லியன்) கொண்ட வெளிநின்ற கடன்பாடுகளையும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான ரூ.19.6 பில்லியன் (ஐ.அ.டொலர் 150 மில்லியன்) வெளிநின்ற கடன்பாடுகளையும் உள்ளடக்கியிருந்தது.


**2013 இறுதியில் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ.2,960.4 பில்லியனுக்கு 7 சதவீதத்தினால் அதிகரித்த போதும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இது 2012 இறுதியின் 36.5 சதவீதத்திலிருந்து 34.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்காக பெறப்பட்ட வெளிநாட்டு மூலங்களிலிருந்தான கடன்பாடுகள் மற்றும் இவ்வாண்டுப் பகுதியில் முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமை என்பன வெளிநாட்டுப் படுகடன் இருப்பு அதிகரிப்பிற்குப் பங்களித்தன. சலுகையல்லாப் படுகடன் ரூ.1,467.6 பில்லியனுக்கு 5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் இதன் பங்கு 2012இன் 50.5 சதவீதத்திலிருந்து 2013இல் 49.6 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 2013இல் அரசாங்கம் பன்னாட்டு மூலதனச் சந்தைகளை அணுகாததன் காரணமாக ரூ.1,007.1 பில்லியன் கொண்ட அதிகரித்த வர்த்தகக் கடன்பாடுகளுக்கு திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளே ஒரே காரணமாக அமைந்து சலுகையல்லாப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தது. அதேவேளை, இருபுடை மூலங்களிலிருந்தான வெளிநாட்டுப் படுகடன் ரூ.1,049.8 பில்லியனுக்கு 7.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் பல்புடை மூலங்களிலிருந்தான வெளிநாட்டுப் படுகடன் ரூ.903.5 பில்லியனுக்கு 7 சதவீதத்தினால் அதிகரித்தது.

**செலாவணி வீதத்தில் ஏற்பட்ட வேறுபாடுகளின் தாக்கம் காரணமாக மொத்த படுகடன் இருப்பு ரூ.19 பில்லியனினால் வீழ்ச்சியடைந்தது.** இலங்கை ரூபா யப்பானிய யென்னுக்கெதிராக 18.8 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 10.2 சதவீதத்தினாலும் உயர்வடைந்த வேளையில் இது யூரோ சிறப்பு எடுப்பனவு உரிமைகள் மற்றும் ஐ.அ.டொலருக்கெதிராக முறையே 6.8 சதவீதத்தினாலும் 3 சதவீதத்தினாலும் 2.7 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது. மேலும், மொத்த வெளிநின்ற படுகடன் இருப்பு ஐ.அ.டொலர் (34.1 சதவீதம்), சிஎஉ (24 சதவீதம்), யப்பானிய யென் (16.4 சதவீதம்), யூரோ (6.3 சதவீதம்), இலங்கை ரூபா (16.1 சதவீதம்) மற்றும் ஏனைய நாணயங்கள் (3 சதவீதம்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இதன் விளைவாக, வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் இருப்பு ரூ.25.5 பில்லியனினால் வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் நாணயமாற்றுவீத மாறல்கள் காரணமாக இருந்த வேளையில் ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் (இலங்கை அபிவிருத்தி முறி மற்றும் வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவுகள்) ரூ.6.5 பில்லியனினால் அதிகரித்தமைக்கு ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையே காரணமாகும்.

## படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2012இன் ரூ.1,017.5 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.1,162.9 பில்லியனுக்கு அதிகரித்தது.** கடன் முதல் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ.700 பில்லியனுக்கு ரூ.91.1 பில்லியனினால் அதிகரித்து மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் 60.2 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.462.9 பில்லியனுக்கு ரூ.54.4 பில்லியனினால் அதிகரித்து மீதிக்கு வகைகூறியது. உள்நாட்டு மூலங்களுக்கான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2012இனை விட ரூ.117.6

வரைபடம் 6.11 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (மொ.உ.உ.இன் சதவீதமாக)




பில்லியனினால் ரூ.850.7 பில்லியனுக்கு அதிகரித்தது. அது கடன் முதல் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டினை விட ரூ.496 பில்லியனுக்கு ரூ.80.6 பில்லியனினால் அதிகரித்தமையினதும் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.354.7 பில்லியனுக்கு ரூ.37 பில்லியனினால் அதிகரித்தமையினதும் இணைந்த விளைவாகும். வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளைப் பொறுத்தவரையில் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.108.2 பில்லியனுக்கு ரூ.17.3 பில்லியனினால் அதிகரித்த வேளையில் கடன் முதல் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ.204 பில்லியனுக்கு ரூ.10.4 பில்லியனினால் அதிகரித்து படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் 2012 உடன் ஒப்பிடுகையில் ரூ.312.2 பில்லியனுக்கு ரூ.27.8 பில்லியனினால் தேறிய அதிகரிப்பொன்றினை விளைவித்தது.

படுகடன் தீர்ப்பனவுக் குறிகாட்டிகள் 2013இல் கலப்பான செயலாற்றத்தைக் காட்டின. மொ.உ.உற்பத்திக்கான மொத்த வட்டிக் கொடுப்பனவுகளின் விகிதம் 2012இன் 5.4 சதவீதத்திலிருந்து 2013இல் 5.3 சதவீதத்திற்கு சிறிதளவால் மேம்பட்ட வேளையில், வட்டிக் கொடுப்பனவுகளையும் கடன் முதல் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய படுகடன் தீர்ப்பனவுகள் கொடுப்பனவுகள் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2012இனைப் போன்று 13.4 சதவீதம் கொண்ட அதே மட்டத்தில் காணப்பட்டது. மேலும், மொ.உ.உற்பத்திக்கான உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 2012இன் 4.2 சதவீதத்திலிருந்து 2013இல் 4.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், அரச அரசிறைக்கான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவு விகிதம் 2012இன் 96.8 சதவீதத்திலிருந்து 2013இல் 102.2 சதவீதத்திற்கு மோசமடைந்தமைக்கு 2013இல் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட 14.3 சதவீதம் கொண்ட உயர்ந்த அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் அரசிறைச் சேகரிப்புக்கள் 8.2 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தமையே காரணமாகும்.

அட்டவணை 6.7 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

ரூ.மில்லியன்

| விடயம் | 2010 | 2011 | 2012 | 2013 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 820,448 | 895,382 | 1,017,468 | 1,162,900 |
| உள்நாடு | 686,800 | 728,028 | 733,100 | 850,748 |
| வெளிநாடு | 133,648 | 167,354 | 284,368 | 312,152 |
| கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் | 467,856 | 538,683 | 608,970 | 700,035 |
| உள்நாடு | 389,672 | 439,894 | 415,441 | 496,042 |
| வெளிநாடு | 78,184 | 98,789 | 193,529 | 203,993 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 352,592 | 356,699 | 408,498 | 462,865 |
| உள்நாடு | 297,127 | 288,134 | 317,659 | 354,706 |
| குறுங்காலம் | 58,943 | 46,257 | 65,049 | 69,712 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 238,185 | 241,877 | 252,610 | 284,994 |
| வெளிநாடு | 55,464 | 68,565 | 90,839 | 108,159 |

மூலங்கள் : நிதி மற்றும திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 6.8 அரசின் படுகடன் குறிகாட்டிகள்

| குறிக்காட்டிகள் | 2010 | 2011 | 2012 | 2013 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| அரசபடுகடன்/மொ.உ.உ | 81.9 | 78.5 | 79.2 | 78.3 |
| உள்நாட்டு படுகடன்/மொ.உ.உ | 45.8 | 42.9 | 42.7 | 44.2 |
| வெளிநாட்டு படுகடன்/மொ.உ.உ | 36.1 | 35.6 | 36.5 | 34.1 |
| மொத்த வெளிநாட்டு படுகடன்/ஏற்றுமதிகள்(அ) | 161.4 | 154.4 | 159.9 | 151.9 |
| மொத்தபடுகடன் பணி/மொ.உ.உ | 14.6 | 13.7 | 13.4 | 13.4 |
| மொத்தப்படுகடன் பணி/ அரசிறை (ஆ) | 100.4 | 92.5 | 96.8 | 102.2 |
| இதில் உள்நாட்டுப்படுகடன் பணி/ அரசிறை (ஆ) | 84.0 | 75.2 | 69.7 | 74.8 |
| மொத்தப்படுகடன் பணி/ அரச செலவினம் (இ) | 46.9 | 45.4 | 47.0 | 49.1 |
| இதில் உள்நாட்டுப்படுகடன் செலவினம் (இ) | 39.3 | 36.9 | 33.9 | 35.9 |
| வெளிநாட்டு படுகடன் பணி/ஏற்றுமதிகள் (அ) | 10.7 | 11.1 | 16.4 | 16.0 |
| மொத்த வட்டி/மொ.உ.உ | 6.3 | 5.5 | 5.4 | 5.3 |
| உள்நாட்டு வட்டி/மொ.உ.உ | 5.3 | 4.4 | 4.2 | 4.1 |
| உள்நாட்டு வட்டி/அரச நடைமுறைச் செலவினம் | 31.7 | 28.1 | 28.1 | 29.4 |
| வெளிநாட்டு வட்டி /ஏற்றுமதிகள் (அ) | 4.4 | 4.5 | 5.2 | 5.5 |

(அ) பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள்
(ஆ) அரச வருமானம் பொருளாதார வடிவமைப்பில் உள்ளது
(இ) அரச செலவினம் கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளைஉள்ளடக்குகிறது

மூலங்கள் : நிதி மற்றும திட்டமிடல் அமைச்சு
தொகைமதிப்பு மற்றும புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## 6.5 துணைத் தேசிய அரசாங்கங்களின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

### துணைத் தேசிய அரசாங்கங்களின் கொள்கைப் பணிப்புரைகளும் வழிமுறைகளும்

**மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் இலங்கையில் துணைத் தேசிய அரசாங்க முறைமையினை உள்ளடக்கியுள்ளன.** யாப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் ஒன்பது மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதுடன் இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்ற முறைமை 335 நிறுவனங்களை கொண்டிருக்கிறது. 2013 இறுதியில், உள்ளூராட்சி மன்ற முறைமை 23 மாநகரசபைகளையும் 41 நகரசபைகளையும் 271 பிரதேச சபைகளையும் உள்ளடக்கியுள்ளது.

**2013ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, துணைத் தேசிய அரசாங்க மட்டத்தில் அபிவிருத்தியில் இன்றியமையாததொரு பங்கினைத் தொடர்ந்தும் ஆற்றியது.** அமைச்சு, மாகாண சபை மட்டத்திலும் உள்ளூராட்சி மன்ற மட்டத்திலும் அபிவிருத்தித் தேவைகளை அடையாளம் காணும் பொருட்டு துணைத் தேசிய அரசாங்க அதிகாரசபைகளுடன் மிகக் காத்திரமான முறையில் தொடர்ந்தும் பணியாற்றியதுடன் கொடைமுகவர்களுடன் காத்திரமான ஒருங்கிணைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் முதலீடுகளுக்கும் வசதியளித்தது. மேலும், பொதுமக்களுக்கு சிறந்த பணிகளை வழங்கும் விதத்தில் உட்கட்டமைப்பு வசதிகளும் முகாமைத்துவ இயலாற்றல்களும் மேம்படுத்தப்பட்டன. தரமுயர்த்தப்பட்ட பணிகளை வழங்கவும் பொதுமக்களுக்கான தேவைகளை சரியான நேரத்தில் முடிப்பதற்குமாக அமைச்சினால் பல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடங்கப்பட்டன. இதற்கமைய கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டமானது அமைச்சின் கீழ் வரும் தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ ஆதரவு நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும், “வினைத்திறன் மிக்க பணிகளை வழங்குவதன் மூலம் நாளைய சுபீட்சம்” என்ற தொனிப்பொருளில் உள்ளூராட்சி மன்ற வாரமொன்று 2013இல் நடத்தப்பட்டது.

**அபிவிருத்தி குறைந்த பிரதேசங்களிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களினுடைய உட்கட்டமைப்புப் பணிகளை மேம்படுத்தும் குறிக்கோளுடனும் மேம்பட்டதும் வலுவானதுமான பணிகளை வழங்குவதற்காக உள்ளூராட்சி மன்றங்களின் நிறுவன ரீதியான இயலளவை அபிவிருத்தி செய்வதற்கு உதவும் விதத்திலும் 2013இலும் “புறநெகும” நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தது.** இதற்கமைய, இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படுவதற்காக 108 உள்ளூராட்சி மன்றங்கள் அடையாளம் காணப்பட்டன. செயற்றிட்டமானது மூன்று முக்கிய கூறுகளை உள்ளடக்கியிருந்தது. அவையாவன: உள்ளூராட்சி மன்ற உட்கட்டமைப்பினையும் பணி வழங்கலையும் முன்னேற்றுதல், உள்ளூராட்சி மன்ற கொள்கைச் சீர்திருத்தங்களையும் இயலளவையும் கட்டியெழுப்புதல் மற்றும் முகாமைத்துவத்தினையும் நிருவாகத்தினையும் செயற்படுத்தல். இச்செயற்றிட்டத்தின் கீழ், வாராந்த சந்தைகள், சிறுவர் மற்றும் மகப்பேற்று சிகிச்சை நிலையங்கள், வேகப் பயிற்சி நடைபாதைகள், வீதிகள் மற்றும் பூங்காக்கள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டன. மேலும், நகர மக்களுக்கும் தமது கிராமங்களில் கிடைக்காத பணிகளுக்காக நகரப்பகுதிகளுக்கு பயணிக்கும் கிராம மக்களுக்கும் பணிகளை வழங்குவதற்காக பிரதேச பணி நிலையங்கள் உருவாக்கப்பட்டன.

**2013இல் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் வீதி அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கியது.** இதன்படி, மாகாண வீதிகளின் இணங்குவிப்புக்களை மேம்படுத்தும் நோக்குடன் அமைச்சு மாகாண சபை வீதிகள் செயற்றிட்டம் (மத்திய, சப்பிரகமுவா மாகாணங்கள்), மாகாண வீதிகள் முன்னேற்ற செயற்றிட்டம், கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண வீதிச் செயற்றிட்டம் மற்றும் வட மாகாண இணைப்புச் செயற்றிட்டம் என்பனவற்றை நடைமுறைப்படுத்தியது. யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவர், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்படும் இச்செயற்றிட்டங்கள் 2014/15இல் நிறைவடையும். மேலும், 2013இல் அமைச்சு கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவச் செயற்றிட்டம், அனர்த்த பதிலிறுப்பு வலையமைப்பினை (கட்டம் II) தரமுயர்த்துதல், இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்றிட்டம் என்பனவற்றையும் தொடர்ந்து மேற்கொண்டது.

**சமச்சீரான பிரதேச வளர்ச்சியை எய்தும் நோக்குடன், மாகாண சபைகள் தமது வரவு செலவுத்திட்டத்தின் பரந்தளவிலான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் விதத்தில் அவற்றுக்கான மத்திய அரசாங்கத்தின் மாற்றல்களை விதந்துரைக்கின்ற மிக இன்றியமையாததான வகிபாகத்தினை நிதி ஆணைக்குழு தொடர்ந்தும் மேற்கொண்டது.** முன்னர் மாகாணங்களினால் பின்பற்றப்பட்ட பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு அணுகுமுறையினை மேம்படுத்துவதற்காக இவ்வாண்டுப் பகுதியில் முகவர் பெறுபேற்றுக் கட்டமைப்பு அணுகுமுறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதி ஆணைக்குழுவின் விதந்துரைப்புடன் நடுத்தர கால பெறுபேற்று அடிப்படையிலான கட்டமைப்பு 2013 - 2017 ஒவ்வொரு மாகாணத்திலும் 2013இல் தொடங்கியது. அதேவேளை, ஆணைக்குழுவின்படி, போதுமான நிதி ஒதுக்கப்படாமை, மூலதனச் செயற்றிட்டங்களுக்கான உண்மையான விடுவிப்பு மற்றும் நீதிமன்ற தண்டப் பணங்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு விடுவிப்பது தொடர்பில் காணப்பட்ட தாமதம் என்பன மாகாணசபைத் தொழிற்பாடுகள் தொடர்பில் காணப்பட்ட முக்கிய பிரச்சனைகளாகும்.

## மாகாண சபைகளின் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள்

**மாகாண சபைகளின் மொத்த அரசிறைச் சேகரிப்பு 2012இன் ரூ.49.2 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.50.5 பில்லியனுக்கு 2.5 சதவீதத்தினால் அதிகரித்தது.** எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசிறைச் சேகரிப்பு 2012 இனைப் போன்றே 2013இலும் 0.6 சதவீதத்தில் காணப்பட்டது. 2013இல் வரி அரசிறை ரூ.43.9 பில்லியனுக்கு 5.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில்

**அட்டவணை 6.9 மாகாண சபைகளுக்கான வரவு செலவுத்திட்ட வெளிப்பாடு**

ரூ.மில்லியன்

| விடயம் | 2010 | 2011 | 2012 | 2013 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| **மொத்த அரசிறை** | **36,829** | **40,990** | **49,235** | **50,469** |
| வரி வருமானம் | 31,049 | 34,658 | 41,657 | 43,937 |
| வரி அல்லா வருமானம் | 5,780 | 6,332 | 7,578 | 6,532 |
| **மொத்த செலவினம்** | **145,491** | **157,373** | **161,341** | **186,062** |
| நடைமுறைச் செலவினம் | 119,162 | 129,600 | 139,121 | 156,799 |
| இதில் தனிப்பட்ட ஊதியம் | 91,644 | 101,886 | 108,246 | 116,757 |
| மூலதனச் செலவினம் | 26,329 | 27,773 | 22,220 | 29,263 |
| **மத்திய அரச மாற்றல்கள்** | **107,032** | **116,383** | **112,106** | **135,593** |
| திரட்டிய கொடைகள் | 85,299 | 94,603 | 91,892 | 108,801 |
| பிரமாணங்களைஅடிப்படையாகக் கொண்ட கொடைகள் | 2,612 | 3,854 | 2,861 | 2,264 |
| அபிவிருத்திக் கொடைகள் (அ) | 11,683 | 9,953 | 5,901 | 6,429 |
| சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான பன்னாட்டுக் கொடைகள் | 7,439 | 7,973 | 11,452 | 18,100 |

(அ) குறித்துரைக்கப்பட்ட மாகாண அபிவிருத்திக் கொடைகள்

மூலங்கள் : மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
நிதி மற்றும திட்டமிடல் அமைச்சு

வரியல்லா அரசிறை ரூ.6.5 பில்லியனுக்கு 13.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மத்திய அரசிலிருந்தான தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியின் மாற்றல்கள் ரூ.19.6 பில்லியனுக்கு 3.4 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்தமைக்கு, மேம்பட்ட உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் பெறுபேறாக மொத்த தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். 2013இல் முத்திரைத் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.17.1 பில்லியனுக்கு 3.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு சத்தியக்கடதாசி, காப்புறுதிக் கொள்கைகள், நொத்தாரிசு ஆணைகள், கொடுகடன் அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன மீது பிரயோகிக்கத்தக்க முத்திரைத் தீர்வையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இதேபோன்று, உரிமக் கட்டணத்திலிருந்தான அரசிறை 2013இல் ரூ.6.5 பில்லியனுக்கு 27.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. 2013இல் மத்திய அரசாங்கத்திலிருந்தான தேசத்தினைக் கட்டியஎழுப்பும் வரி மாற்றல்கள் மொத்த வரி அரசிறையில் 44.5 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனைத் தொடர்ந்து முத்திரைத் தீர்வைகள் 39 சதவீதத்தினைக் கொண்டிருந்தன. மேல் மாகாண சபை மாகாண சபைகளின் அரசிறைச் சேகரிப்பிற்கான முதன்மைப் பங்களிப்பாளராகத் தொடர்ந்தும் விளங்கி 2012இன் 61.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இன் மொத்த அரசிறைச் சேகரிப்பில் 60.5 சதவீதத்திற்கு வகைகூறியது. மேல் மகாணத்தினைத் தொடர்ந்து மாகாண சபைகளின் மொத்த அரசிறைச் சேகரிப்பில் மத்திய மாகாணம், தென் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்கள் ஏறத்தாழ முறையே 9.5 சதவீதத்திற்கும் 9.1 சதவீதத்திற்கும் 5.8 சதவீதத்திற்கும் வகைகூறின.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மாகாண சபைகளின் மீண்டெழும் செலவினம் முன்னைய ஆண்டினைப் போன்று 2013இலும் 1.8 சதவீதமாகத் தொடர்ந்தும் விளங்கிய போதும், பெயரளவு நியதிகளில் இது 2013இல் ரூ.156.8 பில்லியனுக்கு 12.7 சதவீதத்தினால் அதிகரித்தது.** தனியாள் ஊதியங்கள் மீண்டெழும் செலவினத்தில் மிகப் பெரும் தனியொரு விடயமாக விளங்கி 2013இல் மாகாண சபைகளின் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 74.5 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் கல்வி மற்றும் நலத்துறைகளின் தனியாள் ஊதியங்கள் மொத்த தனியாள் ஊதியச் செலவில் ஏறத்தாழ 90 சதவீதத்திற்கு வகைகூறின. தொழிற்பாட்டு அடிப்படையில், முக்கியமாக கல்வி மற்றும் நலத் துறை தொடர்பான சமூக உட்கட்டமைப்பு மீதான நடைமுறைச் செலவினம் ரூ.139.3 பில்லியனாக விளங்கி 2013இன் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 88.8 சதவீதத்திற்கு வகைகூறியது. மீண்டெழும் செலவினத்தில் மிகுதி 11.2 சதவீதம் மாகாண நிருவாகம் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்ப தொடர்பான செலவினங்களின் பேரில் ஏற்பட்டதாகும். அதேவேளை மேல் மாகாணம் தொடர்ந்தும் பாரிய செலவிடல் அலகாக விளங்கி மொத்த மீண்டெழும் செலவினத்தில் 22 சதவீதத்திற்கு வகைகூறியது.

**மாகாண சபைகளின் மூலதனச் செலவினம் 2012இன் ரூ.22.2 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.29.3 பில்லியனுக்கு 31.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.** இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மாகாண சபைகளின் மூலதனச் செலவினம் முன்னைய ஆண்டினைப் போன்றே 2013இலும் 0.3 சதவீதத்தில் காணப்பட்டமைக்கு, பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்காக கிராமிய மட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்ற அரசாங்கத்தின் குறிக்கோளுடன் மூலதன செலவினத் திட்டங்களுடன் இணங்கிச் செல்லும் மாகாண சபைகளின் கடப்பாடுகளே முக்கிய காரணமாகும். மீளாய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் ரூ.18.1 பில்லியன் மற்றும் ரூ.6.4 பில்லியன் கொண்ட நிதிகள் முறையே சிறப்புச் செயற்றிட்டங்கள் மீதும் மாகாணங்களுக்கென குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மீதும் செலவிடப்பட்ட வேளையில் மற்றைய மாகாண மட்டத்திலான முதலீடுகள் 2013இல் ரூ.4.7 பில்லியன் செலவினை ஏற்படுத்தியதுடன் இது முக்கியமாக மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு மற்றும் மேம்பாடுகள் மற்றும் மூலதன மாற்றல்கள் தொடர்பான துறைகளில் காணப்பட்டது.

**மாகாண சபைகளுக்கான மத்திய அரசாங்கத்தின் மாற்றல்கள் 2012இன் ரூ.112.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ரூ.135.6 பில்லியனுக்கு 21 சதவீதத்தினால் அதிகரித்தன.** இம்மாற்றல்கள் தொகை வடிவிலான கொடைகள், பிரமாணத்தினை அடிப்படையாகக் கொண்ட கொடைகள், மாகாண ரீதியில் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைகள் மற்றும் சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான கொடைகள் ஆகியவற்றின் வடிவத்தில் காணப்பட்டன. மாகாண சபைகளின் நடைமுறை செலவின நிகழ்ச்சித்திட்டத்தில் காணப்படும் மூலவள இடைவெளியினை நிரப்புவதற்கான தொகை வடிவிலான கொடைகள் தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தின் மாற்றல்களில் மிகப் பெரும் வடிவினதாக அமைந்து ரூ.108.8 பில்லியனாக (மொத்த மாற்றல்களில் 80.2 சதவீதம்) விளங்கியது. மேலும், குறித்துரைக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்வதற்கான மாகாண ரீதியில் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைகளின் கீழான மாற்றல்கள் மற்றும் தற்றுணிபு ரீதியிலான செலவினத் தேவைப்பாட்டு நிதிக்கான பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்ட கொடைகள் 2013இல் முறையே ரூ.6.4 பில்லியனாகவும் ரூ.2.3 பில்லியனாகவும் விளங்கின. அதேவேளை, மாகாண சபைகளின் செலவினத்தில் மத்திய அரசாங்கத்திலிருந்தான மாற்றல்களின் மூலம் நிதியிடப்பட்ட அளவு முன்னைய ஆண்டின் 69.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 72.9 சதவீதமாகக் காணப்பட்டது. ஆகவே, மாகாண சபைகளுக்கான மாற்றல்களைக் குறைப்பதற்கு மாகாண சபைகள் அரசிறைத் திரட்சியை அதிகரிப்பது இன்றியமையாததாக இருப்பதுடன் இதன் மூலம் மாகாண சபைகள் மத்திய அரசாங்கத்தில் தங்கியிருப்பதனையும் குறைக்கமுடியும்.